# இந்து ஒளி

தீபம் 23 சுடர் 3

HINDU OLI



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் மகோற்சவ சிறப்பிதழ்

அனுசரணை : அமரர் செல்லப்பா குகதாசன் அறக்கொடை நிதியம்

விகாரி வருடம் ஆனி – ஆடி

June - July 2019

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்

Religious Journal of All Ceylon Hindu Congress

மாமன்றத்தினால், திருமுறிகண்டியில் அமைக்கப்பட்டு வருகின்ற
“சரவணப்பொய்கை” திட்டப் பணிகள்.



உ
சிவமயம்
# இந்து ஒளி
தீபம் - 23 சுடர் - 03
விகாரி வருடம் ஆனித் திங்கள் 30 ஆம் நாள் (14.07.2019)

## பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

மாதரப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்

### திருவாசகம்

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன் ஓர் கைம்மாறே.

### திருவிசைப்பா

தன்னடி நிழற்கீழ் என்னையும் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
என்னிடைக் கமலம் மூன்றினுள் தோன்றி
எழுஞ்செழுஞ் சுடரினை அருள்சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்குவெண் பளிங்கின்
பொன்னடிக் கடிமை புக்கினிப் போக
விடுவனோ பூண்டுகொண்டேனே

### திருப்பல்லாண்டு

சேலுங் கயலுந் திளைக்குங்
கண்ணாரிளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா
நெறிதந்து வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதும் ஒத்துநின்
றானுக்கே பல்லாண்டு கூறுதுமே

### திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

திருச்சிற்றம்பலம்

## திருக்கேதீஸ்வர வரவேற்பு நுழைவாயில் விடயத்தில் கௌரவ இந்து சமய கலாசார அமைச்சர் துரித நடவடிக்கை எடுத்தல் அவசியம்.

இவ்வருட சிவராத்திரி நாளிலிருந்து இன்று வரையில் சைவ மக்களின் மிகவும் முக்கியமான பிரச்சனைகளில் ஒன்றாக விளங்குவது திருக்கேதீஸ்வர வரவேற்பு நுழைவாயில் அமைத்தல் தொடர்பான விடயமாகும். இது தொடர்பாக கௌரவ இந்து சமய கலாசார அமைச்சர் உடன் நடவடிக்கை எடுத்ததன் விளைவாக தற்காலிக வளைவு அமைக்கும் வாய்ப்பு அன்று ஏற்பட்டமை மறுக்க முடியாதது.

தற்போது திருக்கேதீஸ்வர ஆலய சூழலுக்குரிய பிரதேசசபை, நிரந்தர நுழைவாயிலுக்கான கட்டுமானப் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கும் நிலையில், கத்தோலிக்க மக்களின் எதிர்ப்பின் காரணமாக, கொடுக்கப்பட்ட அனுமதி மீளப்பெறப்பட்டிருப்பது கவலை தரும் செய்தியாகும்.

வரலாற்று பெருமைமிக்க திருக்கோவில் பாதை நுழைவாயில் வளைவு அமைப்பதில் இவ்வாறான தடங்கல் வந்திருப்பது சைவ மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இதுவிடயம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த கத்தோலிக்கத் தலைவர்கள், இடையூறாக இருக்கும் தமது மதம் சார்ந்த மக்களை நெறிப்படுத்த நெறிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாய கடமையாகும்.

இந்தப் பிரச்சினை தொடருமானால், ஏனைய மாவட்டங்களிலும் சமய முறுகல் நிலை தோன்ற வழிவகுக்கும். கௌரவ இந்து சமய கலாசார அமைச்சர் மனோ கணேசன் அவர்கள் இது விடயத்தை பொறுப்பேற்று, 2500வருட கால வரலாறு கொண்ட திருக்கேதீஸ்வரத்தின் மேன்மையை காக்கவேண்டும் என இந்து மக்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம்.

### வாழ்த்து

வாழ்கவே வாழ்க வென்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே! *(திருமந்திரம்)*

## இந்தச் சுடரில்...


❖ பஞ்ச புராணம் 1
❖ ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 3
❖ நயினை நாகேஸ்வரி 4
❖ நாயகி பொற்றேரை இழுத்திடுவோம் 6
❖ நயினைச் சுவாமிகள் துறவு நிலை 7
❖ நயினைச் சுவாமிகளால் பாடப்பெற்ற நமச்சிவாய மாலை 9
❖ நயினை நாகபூஷணி அம்மன் திருவூஞ்சல் 11
❖ "அப்பர் திருமுறை சுட்டும் மணி நாகேச்சரம் நயினையம்பதியே" 12
❖ நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கீர்த்தனைகள் 15
❖ நயினை நாகம்மை திருக்குடமுழுக்காடற்பத்து 17
❖ ஸ்ரீ நாகபூஷணியம்மை போற்றி மாலை 18
❖ நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மை திருப்பள்ளியெழுச்சி 20
❖ நாகபூஷணி அம்மா... 21
❖ நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருப்பள்ளியெழுச்சி 22
❖ பார்த்தனின் மைந்தனும் பப்பரவன் சல்லியும் 23
❖ இலங்கைத் தமிழரின் பண்டைய இருப்பை வெளிப்படுத்தும் "சரசோதி மாலை" 27
❖ சங்கரன்கோயில் ஆடித் தபசு 29
❖ ஆடி அமாவாசையில் வீடு தேடி வரும் முன்னோர்கள் 31
❖ 'மற(றை)ந்து போகும்' தமிழரின்' தனித்துவமான விழாக்களும் பண்டிகைகளும் 33
❖ மாமன்றச் செய்திகள் 35



**இந்து ஒளி** | அகில இலங்கை இந்து மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் மகோற்சவ சிறப்பிதழ்

ஆனி – ஆடி 2019



ஆசிரியர் குழு : சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
திரு.வே. கந்தசாமி
கலாநிதி த. முத்துகுமாரசாமி
சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்
திரு. த. மனோகரன்



| | |
|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா 60.00 |
| வருடாந்தச் சந்தா (உள்நாடு) | ரூபா 360.00 (தபாற் செலவு தனி) |
| வருடாந்தச் சந்தா (வெளிநாடு) | US டொலர் 15 |



**அகில இலங்கை இந்து மாமன்றம்**

**தலைமையகம்:** 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
தொலைபேசி (கொழும்பு) : 0112434990, தொலைநகல் : 0112344720
மின்னஞ்சல் : hinducongress@gmail.com

**யாழ் பணிமனை :** 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி (யாழ்ப்பாணம்) : 0212221075, தொலைநகல் : 0212217280
மின்னஞ்சல் : hinducongressjaffna@gmail.com
இணையத்தளம் : http://www.hinducongress.lk



*இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.*



**HINDU OLI** | *Publication of* **HINDU RESEARCH CENTRE OF ALL CEYLON HINDU CONGRESS**

NAINATIVU SRI NAGAPOOSHANI AMMAN MAHOTSAVA SPECIAL ISSUE

June - July 2019



**Editorial Board :** Dr. Aru. Thirumurugan
Mr. V. Kandasamy
Dr. T. Muthukumarasamy
Sivasri K. Vaitheeswara Kurukkal
Mr. D. Manoharan



| | |
|---|---|
| Price | Rs. 60.00 |
| Annual Subscription (Inland) | Rs. 360.00 (Excluding Postage) |
| Annual Subscription (Foreign) | US $ 15 (Including Postage) |



**ALL CEYLON HINDU CONGRESS**

**Head Office:** 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720
E-Mail : hinducongress@gmail.com

**Jaffna Office :** 211/17, Temple Road, Nallur, Jaffna.
Telephone No.: 0212221075, Fax No.: 0212217280
E-Mail : hinducongressjaffna@gmail.com
Website : http://www.hinducongress.lk



**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**



**ISSN : 2012 - 9645**



# ஆன்மீகச் சுடரின் அருள்மடல்



## சகல சைவசமய நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும்.



எங்கள் சமயம் மிகத் தொன்மை வாய்ந்தது. ஈழநாட்டிலுள்ள ஆதிமதம் சைவம். அன்று முதல் இன்றுவரை சீரான நிறுவனமயமாக்கல் இன்மையால் எமது சமயம் உரிமைகளைக் கோரமுடியாத நிலையில் இன்று தவிக்கிறது. பௌத்த மதம் தமக்குரிய பீடங்களை கௌரவித்து வழி நடத்துவதனால், பீடாதிபதிகளின் சொற்களுக்கு நாடாளும் அரசு கட்டுப்படுகிறது. கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களும் தங்களுக்குரிய தலைமைத்துவங்களை நெறிப்படுத்துவதனால் அவர்களுக்குரிய கட்டுக்கோப்பு சீராக உள்ளது.

ஆனால், இலங்கையில் சைவ சமயத்தவர்கள் உன்னத கட்டுக்கோப்புக்களுடன் செயற்படவேண்டும் என்பதற்காக நாவலர் பெருமான், சேர் பொன்.இராமநாதன், சேர் பொன். அருணாசலம், இந்துபோர்ட் இராஜரத்தினம் போன்றோர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர்.


அகில இலங்கை இந்து மாமன்றமும் உயர்ந்த இலட்சியத்தோடு ஆறு தசாப்தங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. எல்லா நிறுவனங்களும் ஒன்றிணைந்து ஓர் உயரிய பீடமாக செயற்பட வேண்டியது அவசியமாகும். சைவபரிபாலன சபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம், விவேகானந்த சபை, இந்து மாமன்றம் போன்ற பாரிய அமைப்புக்களுடன், பிற்காலத்தில் தோன்றியுள்ள சிறிய சங்கங்களையும் உள்ளடக்கிய ஓர் இந்து சமய பீடம் அவசியமாகும்.

காத்திரமானதொரு பீடம் இல்லாத காரணத்தினால் மிக முக்கியமான வரலாற்று நிகழ்வுகளை அணிசெய்வதற்கு இயலாத நிலை காணப்படுகிறது. வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட அனைத்து இலங்கையையும் உள்ளடக்கிய இந்து உயர்பீட அமைப்பு தோற்றம்பெற்றால் எமது சமயப் பிரச்சனை, இனப் பிரச்சனை தொடர்பாகவும் கவனம் செலுத்தமுடியும்.

இன்று இந்துக்களின் அதிஉயர் பீடாதிபதி யார் என்று கேட்டால்,பதில் சொல்ல வாய்ப்பின்றிப் போகிறது. இந்நிலை மாறவேண்டும். சகல மாவட்டங்களிலும் ஆதீனங்களின் கிளைகளை நிறுவமுடியாது. காரணம், எங்களிடம் துறவிகளுக்கு பஞ்சம் ஏற்பட்டுள்ளது. எனவே ஒரேயொரு ஆதீனத்தினால் பிரதிநிதித்துவத்தை நிலைநாட்ட முடிவதாக இல்லை.

இதுவிடயம் தொடர்பாக எங்கள் மத நிறுவனங்கள் சிந்தித்து, விரைவில் தீர்க்கமான ஒரு செயற்திட்டத்தை உருவாக்கவேண்டும். இல்லையெனில் அரசியல்வாதிகள் எங்கள் மதப் பிரச்சனைகளைக் கருத்தில் கொள்ளாத நிலை தொடரப்போகிறது.

**ரிஷி தொண்டுநாதன்**





# நயினை நாகேஸ்வரி

- குல சபாநாதன் -

அன்னை பராசக்தி வழிபாடு அகிலமெலாம் பரவியிருப்பதை யாவரும் நன்கறிவர். விளக்கும் ஒளியும்போல சக்தியும் சிவமும் ஒன்றே.

"அருளது சக்தியாகும் அரன் தனக்கு அருளை யின்றித்
தெருள் சிவம் இல்லை, அந்தச் சிவமின்றிச் சத்தியில்லை"

எனச் சிவஞானசித்தியாரில் வரும் அடிகள் இவ்வுண்மையினை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

அன்னை கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தலங்களுள் வட இலங்கையிலுள்ள நயினாதீவு நாகேஸ்வரி ஆலயம் மிகமிகத் தொன்மை வாய்ந்தது.

நயினாதீவுக்கு நந்தாப் புகழையளிப்பது ஆண்டுள்ள நாகேஸ்வரி ஆலயமாகும். இது நாகம்மாள் கோயில், நாகபூஷணியம்பாள் கோயில் எனவும் வழங்கப்படும். இவ்வாலயத்தைப் பற்றியுள்ள ஐதீகங்கள் மிகப்பல.

**நாகம் அர்ச்சனை செய்தது**

முன்னொரு காலத்தில் நயினாதீவிலுள்ள அம்பிகையை ஒரு நாகம் பூசித்து வந்ததாம். ஒருநாள் அந்நாகம் அர்ச்சனை செய்தற்காகப் பூக்கள் கொய்வதற்காகச் செல்லும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது. கருடனைக் கண்டஞ்சிய நாகம் கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக்கொண்டிருந்தது. கருடனும் அந்த நாகத்தைக் கொல்லாமலும் அதனை விட்டகலாமலும் அதற்கெதிரேயிருந்த கல்லொன்றின் மீது இருந்தது. இங்ஙனம் இவையிரண்டும் பகைமை கொண்டிருக்கும் சமயத்தில் அக்கடல் வழியாக மரக் கலத்திற் சென்ற வைசியன் ஒருவன் அந்நாகத்தின் பயத்தைக் குறிப்பாலுணர்ந்து மரக்கலத்தை நிறுத்தி அக்கருடனை விலகும்படி கேட்டான்.

"உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து என் முன் வைத்தால் விலகுவேன்" என்றது கருடன். வணிகனும் அங்ஙனமே செய்தான். நாகமும் தனது நன்றியைச் செலுத்தி நயினாதீவை அடைந்தது. வணிகனும் தனது நாட்டிற்குத் திரும்பினான். நடந்தவற்றையெல்லாம் தன் மனைவியிடம் கூறினான். அன்றிரவு வணிகனும் மனைவியும் நித்திரை கொள்ளும்பொழுது ஒரு பேரொளி தோன்றி அவர்களுடைய கண்களைச் சிறிது நேரம் கூசச் செய்தது. பின்பு அவர்கள் எழும்பிப் பார்த்தபொழுது நாகரத்தினக் கற்கள் அவ்வறையில் இருப்பதைக் கண்டார்கள். "நயினாதீவிலுள்ள அம்பிகையின் திருவருள் இருந்த வாறென்னே" என அவர்கள் வியப்புற்று நயினாதீவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார்கள். அவர்கள் நயினாதீவுக்குச் சென்று வடகிழக்குக் கடற்கரையில் நாகம்மாளுக்குச் சிறந்ததோர் ஆலயம் கட்டுவித்தார்கள். ஏழு வீதிகளும் கோபுரங்களும் அமைத்தார்கள். நயினாப்பட்டர் எனும் பிராமண குருவைப் பூசகராக நியமித்தார்கள். இத்தீவுக்கருகில் இப்பொழுதும் பாம்பு சுற்றிய கல், கருடனிருந்தகல் என இரு கற்களைப் பொதுமக்கள் காட்டுகின்றார்கள். இக்கற்கள் அலைகளினால் மோதுண்டு இயற்கையாகப் பெற்ற வடிவங்களை ஆதாரமாகக் கொண்டு மேற்கூறிய கதைகள் உருவாகியிருத்தலுங் கூடும்.

**கோயிலை இடித்தல் :**

புராதனப் பெருமை வாய்ந்த நாகேஸ்வரி ஆலயம் வர்த்தகரின் பொருள்கொண்டு விஸ்தரிக்கப்பட்டு விளங்கு வதைக் கண்ட போர்த்துக்கீசர் இதனைச் சும்மா விட்டு வைப்பார்களா? இந்த ஆலயத்தில் உள்ள பொருள் பண்டத்தை அபகரிக்கும் பேராசை பிடித்த போர்த்துக்கீசர் இதனை அழிக்கத் தொடங்கினர். கோயில் தரைமட்டமாக்கப்பட்டது. இந்த வன்கணாளரின் கொடிய செயலைக் கண்டு சைவமக்கள் அனலிடைப்பட்ட புழுப்போலத் துடிதுடித்தனர். தாங்கள் பக்தியுடன் வழிபட்டு வந்த மூர்த்திகளையும் பூசைப் பாத்திரங்களையும் தேர்களையும் அந்நியர் தீண்டக் கூடாதெனக் கருதி சைவ நன்மக்கள் அவற்றை வெவ்வேறிடங்களில் ஒளித்து வைத்தார்கள். அம்பாளை மேற்குக் கடற்கரையிலுள்ள ஓர் ஆலமரப் பொந்தில் வைத்து வழிபட்டு வந்தனர். இந்தமரம் "அம்பாள் ஒளித்த ஆல்" என வழங்கப்பட்டதென ஓர் ஐதீகமுண்டு. அன்னியர் கோவிலை இடித்த போதிலும் அம்பாள் வழிபாட்டை நிறுத்த முடியவில்லை. அவர் நயினாதீவு மக்கள் ஒவ்வொருவருடைய உள்ளமாகிய பெருங்கோவிலில் உறுதியான இடம்பெற்று விளங்கினாள். அன்னிய மதத்தினர் இன்னல் செய்தவிடத்தும் நயினாதீவு மக்கள் சைவப்பற்றினைக் கைவிடவில்லை யென்பதனை இது உறுதிப்படுத்துகின்றது.

**கோயிற் புனரமைப்பு :**

டச்சுக்காரர் ஆட்சியின் பின்னர் நயினாதீவில் மீண்டும் நாகேஸ்வரி ஆலயம் சிறிய அளவிற் கட்டப்பெற்றது. எனினும் அங்கே ஸ்தாபிக்கப்பெற்றிருந்த சிவலிங்கத்தைச் சைவர்கள் தாம் மறைத்து வைத்திருந்த இடத்திற் காணாமையாற் பெரிதும் கவலை கொண்டார்கள். ஆயினும் நயினாதீவுக்கு வடபால் உள்ள புலியேந்தி அல்லது புளியந்தீவு எனும் சிறியதீவில் பழைய சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதாகக் கேள்வியுற்ற சைவர்கள் ஒருவாறு மனந்தேறினார்கள். அழகிய கோபுரம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலம் வரை நாகபாம்புகள் இக் கோயிலுக் கருகில் வந்து செல்வது வழக்கமெனச் சில முதியோர் கூறக்கேட்டிருக்கிறேன்.




**இப்போதைய கோவில்:**

யாழ்ப்பாணக் கச்சேரியில் சைவசமயக் கோவில்களைப் பதிவு செய்து வைத்திருக்கும் பழைய இடாப்பு ஒன்று உண்டு. இது 1882 ஆம் ஆண்டளவில் தயாரிக்கப்பட்டது.

இதன்படி, நாகபூஷணி அம்மன் கோவில் 1788 இல் இராமலிங்கர் இராமச்சந்திரர் என்பவரால் கற்கட்டிடமாக கட்டப்பெற்றது. இக்கோயிலின் முகாமையாளர்கள் இராமலிங்கர் கார்த்திகேசரும் பிறரும். இருந்ததாக அறிய முடிகின்றது. ஆண்டுக்கொருமுறை ஆனி 10 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதிவரை 10 நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. திருவிழாக் காலங்களில் 10,000 பேர்வரை அம்பாளைத் தரிசிக்க வருகின்றனர்.

மேலே குறிப்பிடப்பட்ட இராமச்சந்திரனின் ஆண் சந்ததியினரே இக்கோயில் மனேச்சராக இருந்து வருகின்றனர் எனச் சொல்லப்படுகின்றது.காலத்துக்குக் காலம் இக்கோயிலில் அநேக திருப்பணிகள் நடைபெற்று வந்துள்ளன.

கோபுரத் திருப்பணியில் வட்டுக்கோட்டையைச் சார்ந்த இரகுப்பிள்ளைமணியம் அவர்களும், வேலணைச் சோமசுந்தரமணியம் அவர்களும் ஈடுபாடு காட்டினர். (1935 ஆம் ஆண்டு) விமானப் புனரமைப்பு வேலைகள் காரைக்குடி, திரு. M. செல்லக்கண்ணு ஸ்தபதியார் அவர்களால் அமைக்கப் பெற்று (1950 - 51 ஆம் ஆண்டு) மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றது.

புதிய சித்திரத்தேர் 1957 - இல் அமைக்கப்பெற்றது. திரு. ஆ. ஸ்ரீகாந்தா அவர்களைத் தலைவராகவும், திரு. செ. சிவஞானம், திரு. M. கந்தையா ஆகியோர் தனாதிகாரிகளாகவும், திரு. வே. சுந்தரம்பிள்ளை, வே. செல்வநாயகம், திரு. கா. ஆறுமுகம் ஆகியோரைச் செயலாளர்களாகவும் கொண்டு கடமையாற்றிய ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேர்த் திருப்பணிச் சபை இப்புனிதப் பணியை ஆரம்பஞ் செய்தது, திருப்பெருந்திரு. குன்றக்குடி அடிகளாரின் ஆலோசனையின் பேரில் நாகர்கோவில் திரு. S. குமாரசுவாமி ஆசாரியார் அவர்கள் இப்பணியைக் கையேற்று தேர்ச்சிபெற்ற நுண்தொழில் வல்லுநர் சிலரின் உதவியுடனும் அம்பாள் அருளாலும் இனிது நிறைவேற்றினர்.

**பாமாலை சூட்டிய பாவலர் :**

நயினை நாகேஸ்வரி அம்மன் மீது வண்ணைநகர் திரு. அமரசிங்கப் புலவர் அவர்கள் பாடிய நயினை ஊஞ்சல் 1880 ஆம் ஆண்டு அச்சிடப்பெற்றுள்ளது. மிகவும் பிற்காலத்திலிருந்தவரும் அராலியிற் பிறந்து அனலைதீவு, நயினாதீவு, கரம்பன் முதலிய இடங்களில் வசித்தவருமாகிய வரகவி முத்துக்குமாருப் புலவர் (நயினாதீவுச் சாமியார்) நாகேஸ்வரி மீது ஒரு பதிகம் பாடியுள்ளார். 20 ஆம் நூற்றாண்டில் வரகவிப் புலவராக விளங்கிய நயினை நாகமணிப்புலவர், நயினை நீரோட்டய மதவந்தாரி என்ற சிறந்த பிரபந்தத்தை 1930 ஆம் ஆண்டு வெளியிட்டார். இவர் இயற்றிய நயினை மான்மியம் இன்னும் அச்சுவாகனமேறாது உள்ளது. வேலணை திரு. ம. தம்பு உபாத்தியாயர் "நயினை நாகேஸ்வரி பதிகமும் திருவிரட்டை மணிமாலையும்" என்னும் பாடலை 1921 ஆம் ஆண்டில் பாடியுள்ளார். நயினாதீவுச் சுவாமிகளும் கவியோகி சுத்தானத்த பாரதியார் போன்ற மகான்களும் அம்பாளுக்கு அருட்பாமாலை பாடியுள்ளனர்.

**ஸ்ரீ நாகவீஸ்வரியம்மை பதிகம்**

கந்தான தொசியச் சினக்குங் கடாதடக்
கைம்மலைமு கத்தவுணனைக்
கால் கொண் டுதைத்துவன் றோலுரித் துப்போர்த்த
காதலனை மன்றாடியே
முந்தாத ரத்தினொடு மிருநாழி நெற்பெற்று
முடிவிலா வுயிர்களுய்ய
முப்பத் திரண்டறந் தன்னையுத வியவன்னை
மூதுலகி னீயாகையால்
சிந்தாகு லங்கொண் டியான்றிரிதன் முறையோ
தினந்தினஞ் சொலவேண்டுமோ
திருவுள மிரங்கியே சற்றுன் கடைக்கண்
டிருப்பினால் வெகுபாரமோ
நந்தாத வரமுதவு நங்கையே நயினா
நகர்க்கண் மருவுங்கவுரியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசுக
நாகவீஸ் வரியம்மையே.


- வரகவி சி. முத்துக்குமாருப் புலவர்

*(நன்றி : குல. சபாநாதன் அவர்களது 'நயினை நாகேஸ்வரி', பதிப்பு - 1962)*

## இந்து சமய தத்துவங்கள்

தேங்காய் உடைப்பதன் தத்துவம்: ஆன்மாக்களுக்கு ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்கள் உண்டு. இந்த மூன்று மலங்களும் நீங்கினால் ஆன்மாவுக்கு ஆனந்தம் விளைகின்றது. உடம்புக்கு மலச்சிக்கல் எல்லா நோய்களுக்கும் காரணம். அதுபோல் ஆன்மாவிடத்திலுள்ள மலம் நீங்க ஆன்மா இறைவனை வழிபடுதல் வேண்டும்.

தேங்காய்க்கு மேலே உள்ள பச்சை மட்டை மாயா மலம், உரித்து எடுக்கின்ற நார்கள் கன்ம மலம், சன்னதியில் உடைத்து எடுக்கின்ற ஓடு ஆணவ மலம் இந்த மூன்றும் நீங்கினால் வெண்மையான பருப்பு வெளிப்படுகிறது. எனவே, இறைவனிடத்தில் மும்மலத்தை நீக்கி, சுத்த சத்துவ சித்தத்தை அருள வேண்டும் என்று குறிப்பிடுவதுவே தேங்காய் உடைப்பதன் உட்பொருளாகும்.





# நாயகி பொற்றேரை இழுத்திடுவோம்

(நயினைத் தபால்)

காவலூர்க்கவிஞன் ஞா. ம. செல்வராஜன்

**கண்ணிகள்**

வாருங்கள் வாருங்கள் பக்தர்களே - தாயை
வணங்கி வாழ்த்தித் துதித்திடுவோம்
சேருங்கள் சேருங்கள் பக்தர்களே - ஒன்று
சேர்ந்துபொற் றேரை யிழுத்திடுவோம்.

கூடியே ஒன்றாக நின்றிடுவோம் - கரம்
கூப்பி அம்பாளை மன்றாடிடுவோம்
பாடி மகிழ்ந்து கொண்டாடி அனைவரும்
பக்தியாய்த் தேரை யிழுத்திடுவோம்.

அம்பாளின் செம்பாதம் கிட்டிடுவோம் - மனத்
தன்பாகத் தேர்வடந் தொட்டிடுவோம்
நம்பாலுறும் பவவெம்பிணி தீர - நம்
நாயகி தேரை யிழுத்திடுவோம்.

வார்முர சங்கள் அடித்திடுவோம் - தாயை
வாழ்த்திச் சங்கீதம் படித்திடுவோம்
ஊர்முழு துங்கூடி எங்கள் நாகேஸ்வரி
ஊர்ந்திடுந் தேரை யிழுத்திடுவோம்.

ஆல வட்டங்க ளெடுத்திடுவோம் - எம
தன்பான நெஞ்சைக் கொடுத்திடுவோம்
கோலமுடனிளம் வால வயோதிபர்
கூடியே தேரை யிழுத்திடுவோம்.

வெண்சா மரைகொண்டு வீசிடுவோம் - எங்கள்
வேதனையைத் தாய்க்குப் பேசிடுவோம்
எண்சாணுடம்பு இருக்குமட்டுந் தாயார்
ஏறிடுந் தேரை யிழுத்திடுவோம்.

சந்தனங் குங்குமஞ் சாற்றிடுவோம் - நறுஞ்
சவ்வாது பன்னீரை ஊற்றிடுவோம்
பந்துசன ரொருமித்து வந்தேகூடிப்
பற்றியே தேரை யிழுத்திடுவோம்.

கற்பூரத் தீபங்கள் காட்டிடுவோம் - இரு
கையை நீட்டி அருள் கேட்டிடுவோம்
அற்புதமாக அழகா யமைந்திட்ட
ஆணிப்பொற் றேரை யிழுத்திடுவோம்.

காணிக்கை நேர்த்தி கொடுத்திடுவோம் - செடில்
காவடி தோளி லெடுத்திடுவோம்
தோணித்துறை தங்கும் நாகம்மாள் தோன்றிடுந்
தூயபொற் றேரை யிழுத்திடுவோம்.

*(நன்றி : குல. சபாநாதன் அவர்களது 'நயினை நாகேஸ்வரி', பதிப்பு - 1962)*



இந்து ஒளி - நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
மகோற்சவ சிறப்பிதழ் வெளியீடு

அனுசரணை:

அமரர் செல்லப்பா குகதாசன் அறக்கொடை நிதியம்
குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்

தலைமையகம்:
64, கல்பொத்த வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13

கிளைகள்:
52, 2ம் குறுக்கு வீதி, வவுனியா.
110, பஜார் வீதி, வவுனியா




# நயினைச் சுவாமிகள்

# துறவு நிலை

நயினை நாக பஞ்சாட்சரம்




ஆன்மீகப் பொலிவுடன் திகழும் நயினாதீவில் ஆறுமுகம் - பார்வதி தம்பதியினருக்கு ஆறாவது பிள்ளையாக 1896 ஆம் ஆண்டு அவதாரம் செய்தார். ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் வைத்துப் போற்றப்படும் நயினைச் சுவாமிகள் என்று பொதுவாக அழைக்கப்படும் ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள் அவரது பெற்றோர் அவருக்குச் சூட்டிய நாமம் தம்பிமுத்து என்பதாகும்.

சிறு பராயத்திலேயே ஆன்மீக ஈடுபாட்டுடன் காணப்பட்ட அவர், தனது ஆரம்பக் கல்வியை நயினாதீவு தில்லையம்பல வித்தியாசாலையில் பயின்றார். அவரிடத்தில் இயற்கையிலேயே கவிபாடும் திறமையும் காணப்பட்டது. கல்வியில் நாட்டம் குறைந்து, ஆன்மீக ஈடுபாடு அதிகரித்துக் காணப்பட்டமையினால், இவரது தமையனாராகிய பொறளை முருகேசு என்பவர், தான் கொழும்பு பொறளை என்னுமிடத்தில் நடத்தி வந்த சுருட்டுக் கடைக்கு இவரை அழைத்துச் சென்று தனக்கு உதவியாளராக வைத்திருந்தார். வியாபார நிமிர்த்தமாக வெளியில் சென்றுவரும் இவர் அதிக நேரத்தை முகத்துவாரம் சென்று ஆனைக்குட்டிச் சுவாமிகளுடன் கழிக்கலானார். ஒரு நாள் இவருக்கு இந்தியாவில் இருந்து வந்த ஒரு பெரியாரைச் சந்திக்க நேர்ந்தது. அப்பெரியார் இவர் தங்கியிருந்த இடத்தில் சில நாட்கள் தங்கியிருந்தார். தன்னை ஆளவந்த சற்குருதான் அப்பெரியார் என்பதை அவர் அப்பொழுது அறிந்திருக்கவில்லை. அந்தப் பெரியாரும் இவருமாகத் திடீரென ஒருநாள் கதிர்காமத்துக்கு வெளிக்கிட்டுச் சென்றார்கள். அங்கு கதிரமலை செல்லும் வழியில் இரவு 8 மணியளவில் இருவரும் ஒரு மரத்தடியில் தங்க நேரிட்டது. அந்தத் தனிமையும், அமைதியும் நிறைந்த சூழலில் அந்தப் பெரியாரால் இவருக்குக் குருதீட்சையும் குரு உபதேசமும் கொடுக்கப்பட்டது. கண்ணீர் மல்க, அவர் காலடியில் வீழ்ந்து வணங்கிய இவர், மெய்சிலிர்க்கத் தேவாரம் இசைத்தார். மறுநாட்காலை குருவும் சீடருமாகக் கதிர்காமம் சென்று வழிபாடு செய்தபின் கொழும்பு திரும்பினார். கொழும்பில் தங்கியிருந்த பொழுது வெளியே சென்ற பெரியவர் மீண்டும் திரும்பி வரவேயில்லை. இதனால் இவர் மிகுந்த மனவேதனைக்கு உள்ளானார். இப்பிரிவு அவரைப் பெரிதும் பாதித்தது. பித்துப்பிடித்தவர் போல் செயற்பட்டார்.

கடை நடவடிக்கைகளில் கவனம் செலுத்தாத தம்பியின் நடவடிக்கைகள் தமையனாருக்குச் சினத்தைக் கொடுத்தது. இதனால் தமையனார் அவரைக் கண்டிக்கத் தொடங்கினார். பதிலாக ஒரு கிறுக்கல் கவிதையை எழுதி வைத்துவிட்டு இவர் கடையை விட்டுச் சென்றுவிட்டார்.

தமையனாரும் உறவினர்களும் எங்குதேடியும் இவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ரமண மகாரிஷி சுவாமிகளும் இதேபோல் தான் தமையனாரின் சீற்றத்துக்கு ஆளாகி ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுத் திருவண்ணாமலை சென்றார். எனவே, இவ்விருவருக்கும் ஒரே விதமான காரணங்களே இவர்களைத் துறவு நிலைக்கு அழைத்துச் சென்றுள்ளது. பக்குவநிலை ஏற்படும்போது ஒரு சிறுசம்பவங்களும் துறவுக்குக் காரணமாகிவிடுகிறது. ஆன்மீகம் ஒரு நம்பிக்கையாக ஒரு நெறியாக இருப்பது பொதுவானது. ஆன்மீகமே வாழ்க்கையாகும் போது அது அவர்களை ஞானிகளாகவும், சித்தர்களாகவும் தெய்வீக நிலைக்குக் கொண்டு சென்றுவிடுகிறது. கடையில் இருந்து வெளியேறிக் குருவைத் தேடி இந்தியா சென்று அங்கு அவரைச் சந்தித்து அவர் நிழலிலேயே பல ஆண்டுகள் இருந்தார். பின்னர் தவசிரேஷ்டர்கள்





வாழும் திருவண்ணாமலைக்குச் சென்று அருணாசலக்குகையில் சில வருடங்கள் சமாதி நிஷ்டை நிலையில் அமர்ந்திருந்தார். பின்னர் ரமண மகாரிஷி சுவாமிகளுடன் தங்கி அவரின் ஆன்மீகப் போதனைகளால் வசீகரிக்கப்பட்டுத் தவயோக வாழ்வு வாழ்ந்தார்.

1933 ஆம் ஆண்டு நயினாதீவில் நாகபூஷணி அம்மனின் வருடாந்தப் பெருவிழா முடிந்து அவரை அவரது உறவினர்கள், ஊர்மக்கள் அடையாளம் காணும் பொழுது காவியுடையுடனும், நீண்ட தாடியுடனும் நாகபூஷணி அம்மனையும் ஏனைய ஆலயங்களையும் அண்டி வாழும் ஒருவராகவே காணப்பட்டார். அப்பொழுது அவர் ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள் என்னும் நாமத்துடன் ஞானநிலையினை அடைந்திருந்தார். அத்துடன் சித்துக்கள் மூலம் பல சாதனைகள் செய்யக்கூடிய ஆற்றலையும் பெற்றிருந்தார். எனினும், அவற்றையெல்லாம் துச்சமென தள்ளிய சுவாமிகள் பிரம்மஞானம் ஒன்றையே நாடிநிற்கின்றார்.

முதலியார் குலசபாநாதன் அவர்கள் "சுவாமிகளிடத்து விளங்கிய தெய்வபக்தி, ஞானம், தூய்மை, மன அடக்கம், இன்சொல், அருள்நோக்கு, எந்நேரமும் சிவசிந்தனை, இன்னலுற்று தம்மையடைந்தோருக்கு அவர் கூறும் தேறுதல் வாக்கு, தவக்கோலம், தீர்க்க தரிசனத்தோடு கூடிய அருள் வார்த்தைகளால் அன்பர்களை ஆசீர்வதித்து நல்வழிகாட்டும் அரிய பண்பு என்பன அவரை தெய்வீக நிலைக்கு உயர்த்தின" எனக் கூறியுள்ளார்.

**உசாத்துணை :**

1. ஈழத்துச் சித்தர்கள் - ஆத்மஜோதி நா. முத்தையா
2. நயினைச் சித்தரும் நாவுக்கரசரும் - 2005 வேலுப்பிள்ளை திருநாவுக்கரச ஞாபகார்த்த வெளியீடு
3. நயினை ஞானமுத்து - 2002. சோமஸ்கந்த ஈஸ்வர ஆலயம் - நயினாதீவு

# தம்பு உபாத்தியார்

சரவணை ஊரைச் சேர்ந்த மருதையனார் என்பவரின் மகனான இவர் வேலணை மேற்கூரில் வாழ்ந்தார். வேலணைக் கந்தப்பிள்ளையின் நல்மாணாக்கர்களில் இவரும் ஒருவர். பெரும் புலவரான இவர், நாவலர், கந்தப்பிள்ளை இவர்க ளைப் போற்றிப்பாடிய பாடலொன்று

**ஆறுமுக நாவலனை யம்புவியில் வைத் திருக்கம்**
**பேறிலரா நா பேங்கள் பின்னையிந்தக் கந்தபிள்ளை**
**தேனுமுக மாகநம்மைச் சீர்திருத்தஞ் செய்தசில**
**கூறியிங்கு நாவமையுங் குஞ்சிதத்தாள் கூடுதுமே .**

அக் காலத்தில் தீவுப்பகுதியில் சிறப்பாக வேலணையிலுள்ள பல கோவில்களிலும் கந்தபுராணப் படிப்பு நடைபெறுவது வழக்கம். எமது தம்பு உபாத்தியாயர் புராணங்களைப் படிப்பதிலும் பயன் சொல்வதிலும் , திறமைமிக்கவர்.


இவர் நயினாதீவிலும், நாரந்தனையிலும் ஆசிரியராகப் பணி புரிந்தார். அங்குள்ள தமிழ்ப் புலமைமிக்க பலர் இவரது மாணவர்களே. பல கோவில்களின் பேரிலும் பாடசாலை முதலிய தாபனங்கள் பேரிலும் இவர் பாடியுள்ள பாடல்கள் இன்றும் போற்றப் பெறுகின்றன.

நயினை நாகபூஷணி அம்மன் பேரில் இவர் பாடியுள்ள இரட்டை மணிமாலை இன்றும் பக்தியோடு பாடப்படுவதாகும். அதிலிருந்து ஒருவெண்பாவை மட்டும் இதிற் காணலாம்.

**விதிவலியை வெல்லுதற்கு வேறுமருந் துண்டோ**
**நிதமும் சிவத்தையுட்கொ ளிங்கு - மதுவெனவெம்**
**மூதாளர் கூறுகிறார் மூகனுக்கு**
**நாகம்மே ஏதமறுத் தப்பெருவாழ் வீ!**

இவரது மகள் பண்டிதை வேதநாயகி பல நூல்களைத் தெளிந்து பொருள் கூறும் ஆற்றலுடையவர். கற்றோர் பலரின் ஐயப் பாடுகளைத் தெளிவித்த திறனாளர். பலகட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

*"வேலணைத் தீவு புலவர்கள் வரலாறு"*
*"தில்லைச் சிவன்" - கூடல் -வேலணை.*
*வெளியீடு: வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்*




# நயினைச் சுவாமிகளால் பாடப்பெற்ற

# நமச்சிவாய மாலை

01. தீதகல் மனத்தார்க் கென்றுந் திருவுளம் பற்றித்தீய
பாதக மனைத்துந் தீர்க்கும் பசுபதி நமச்சிவாயம்.

02. சாதனை செய்யேன் நின்றன் தாள்தொழுதுய்யேன் மாயா
வேதனை எய்தாதென்னை ஆண்டருள் நமச்சிவாயம்.

03. மங்கையோர் பாகாவேகா மதிகதிர் தவழும் கற்றைக்
கங்கையார் தரனே முக்கட் கடவுளே நமச்சிவாயம்.

04. நாரணரயனுந் தேடி நாடுதற் கரியசோதி
ஆரண முடிவுந் தேராஜயனே நமச்சிவாயம்.

05. ஐயனே அருளானந்த அப்பனே அடியேனின்னல்
பொய்யெலாம் தடுத்தாள் ஞானப் பூரணா நமச்சிவாயம்.

06. ஆற்றிலேன் போற்றி செய்கேன் அறிவைமாலாக்கும் மாயக்
கூற்றெலாம் தடுத்தாள் ஞானக் குருபரா நமச்சிவாயம்.

07. பலபல நினைவாற் பாத பங்கயம் பற்றாதாழி
அலையின்வாய்த் துரும்பதாகா தாண்டருள் நமச்சிவாயம்.

08. பொன்துணை தருமோவிந்தப் புவிதுணை தருமோவையா
நின்துணையல்வோ வென்றன் உயிர்த்துணை நமச்சிவாயம்.

09 சத்தியாய்ச் சிவமாய்ச் சர்வம் தானுமாய் தனியாய் மோன
முத்தியாம் வித்தே முக்கண் முதல்வனே நமச்சிவாயம்.

10. காலனை யுதைத்துத் தேவர்கடும் பயமொழித்து ஆல
காலநஞ் சுண்டவாதி ஐயனே நமச்சிவாயம்.

11. காமனை யெரித்தாங் காரக் கரிதனை யுரித்துத்தக்க
னாமவன்வேள்வி சாய்த்த அப்பனே நமச்சிவாயம்.

12. அயன்றலை கிள்ளிப் பொல்லா அசுரரை அரிந்து சிங்கம்
ஐயங்கெட வாங்கு சிம்புட் தேவனே நமச்சிவாயம்.

13. புலிதனையுரித்துப் பாம்மைப் பூண்பணியாக்கிக் கொன்றை
மலிசடை கங்கை வைத்த வள்ளலே நமச்சிவாயம்.

14. பாத்திரமேந்தித் தாருகாவனத்தவர்மயங்க
காத்திரமாகி நின்ற கடவுளே நமச்சிவாயம்.

15. சிரித்துமுப் புரம்வில் வாங்கித் தீயெழ வெரித்துஒப்பில்
ஒருத்தனாய் நின்ற கோரருத்திர நமச்சிவாயம்.

16. நரிதனைப் பரியதாக்கி நம்பினார்க் கின்பஞானம்
குருபரனாயிருந்த கொற்றவா நமச்சிவாயம்.

17. மண்ணினைச் சுமந்து பிட்டு வாங்கியுண்டடிமையென்ற
பெண்ணினுக் காளாய்வந்த புண்ணியா நமச்சிவாயம்.

18. கண்ணினுண் மணியாய் எங்கும் கலந்துயிர்க் குயிராய்த்
தங்கும் எண்ணரிதான மோன இறைவனே நமச்சிவாயம்.

19. புண்ணிய உருவே ஞானப் பூரண குருவேயென்றன்
கண்ணினிற் கருவே முக்கட்கடவுளே நமச்சிவாயம்.

20. பெண்ணுமாயாணாயச்சர்வ பொதுநடக்குருவாய் ஞானக்
கண்ணுதற் பரனாய் நிற்கும் கடவுளே நமச்சிவாயம்.

21. அருவுமாய் உருவாய்ச்சோதி அருள்ஒளி வெளியாய் ஒப்பில்
திருவுருமாய்க குருவாய் நின்ற தெய்வமே நமச்சிவாயம்.

22. அரசருக் கரசராகி அம்மையோடப்பனாகிப்
புரவலர் வணங்க வாழ்ந்த புனிதனே நமச்சிவாயம்.

23. இந்திரன் பழியைத் தீர்த்து இராவணன் மயங்கவூன்றிச்
சுந்தரற் காகத்தூது சென்றவா நமச்சிவாயம்.

24. பன்றியின் குட்டிகட்குப் பால்கொடுத்துலக முய்ய
மன்றினில் நட்டமாடு மாதவா நமச்சிவாயம்.

25. பிள்ளையைக் கறியதாக்கிப் பின்னதையெழுப்பி அன்ப
ருள்ளமே களிக்க வந்த உத்தமா நமச்சிவாயம்.

26. யாதினுமரியராகி அடியவர்க் கெளியராகி
வாதுசெய் அசுரை மாய்க்க வருகுரு நமச்சிவாயம்.

27. தீதற வடியார்க் கின்பத் திருவிளையாடல் காட்டிப்
பாதபங்கயத்தாள் சூட்டு பசுபதி நமச்சிவாயம்.


28. பக்தர்கள் பிழைக்க விந்தப் பாரெலாம் தழைக்கச் சர்வ
சித்தர்தம் உருவாய் வந்த தேசிகா நமச்சிவாயம்.

29. வாமமீதுமையை வைத்தும் மன்றினில் நடித்தும் சைவ
ஆகமமுரைத்த தெம்மை ஆளவே நமச்சிவாயம்.

30. அடியவர்க்கடிய ராகி அவருளம் குடியராகி
முடிவிலா வின்பம் நல்கும் முதல்வனே நமச்சிவாயம்.

31. அமலனே ஆதியானே அப்பனே ஒப்பிலாத
விமலனே என்னையாண்ட மெய்யனே நமச்சிவாயம்.

32. மெய்யனேஐயாவெப்ப வினைப்பிறப் பறுத்துச் சேயே
னுய்யவற் புதத்தாள்தந்த ஓம்சிவ நமச்சிவாயம்.





33. மான்மழுச் சூலமேந்தி மதிகதிர் கங்கைதாங்கி
ஆன்முது கேறுஞ் சோதிஜயனே நமச்சிவாயம்.

34. அக்கொடுதலையும் பாம்பும் அணிபணியாக் கொன்றை
கொக்கிற கறுகுதும்பைக் கொற்றாவா நமச்சிவாயம்.

35. அக்கினியுடுக்கை வில்வேல் அபயநல வரதம் ஜீவா
விக்கினந் தீர்க்க வந்தவேடமே நமச்சிவாயம்.

36. கோவண உடைபுலித்தோல் கொடுவிடங்குடையதாக
ஆவிடை உமையாள் பாகத்தப்பனே நமச்சிவாயம்.

37. சுத்தவெண்ணீறுஞ் சாந்துந்துய்யமுப் புரிநூல் மார்பும்
வித்தக வேடஞான மெய்க்குரு நமச்சிவாயம்.

38. பொன்பொருள்போகம்நல்கிப் பிழைபொறுத்துயிர்கட்கெல்லா
மன்பனே இன்ப ஞான அருட் குரு நமச்சிவாயம்.

39. தந்தையர்தாயராகி சகோதரர்தாரமாகி
இந்திரஜாலங்காட்டு மிறைவனே நமச்சிவாயம்.

40. மந்திரமருந்தாய் அன்பர் வடிவமாய் மயக்கந் தீர்க்கும்
தந்திரதவமாய் வந்த சற்குரு நமச்சிவாயம்.

41. மூர்த்திபேதங்களாகி வினைகளுக்கொப்பநல்ல
தீர்த்தமாய்த் தலமாய் வந்த தெய்வமே நமச்சிவாயம்.

42. உள்ளுமாய்ப் புறம்பாகி யோகியாய்ப் போகியாக்கி
எள்ளொடு எண்ணெய்போலெங்கு மிருந்தருள் நமச்சிவாயம்.

43. வாக்கொடு மனதுக்கெட்டாவருள் அறிவாகி அப்பாற்
போக்கொடு வரவு மில்லாப் பூரணா நமச்சிவாயம்.

44. வானொடு நிலநீர்தீயாய் வாயுமற்றவையாய் வேறாய்க்
கோனொரு குருவாய் நின்ற கோலமே நமச்சிவாயம்.

45. குற்றமாய்க் குணமாய் வேறாய்க் குணகுணிகோளாய் நாளாய்
மற்றெவைக் கெல்லாஞ் சாட்சி வடிவனே நமச்சிவாயம்.

46. அணுவினுக் கணுவதாகி யாதினும் பெரியதாகி
மணமலர் வாழ்வாய்ஏக மானவா நமச்சிவாயம்.

47. சரமசராதி யெல்லாம் தந்தவை உடனாய் வேறாய்
வரமருள் மௌனாந்த மாதவா நமச்சிவாயம்.

48. நரர்சுரர் நாகற் காதி நாதனாய் நவைகடிந்து
பரகதிதருமெய்ஞ் ஞானப் பசுபதி நமச்சிவாயம்.

49. கொடியனேன்றன்னை ஆண்ட குருமணிகொதிலாமெய்
அடியவர்க்கின்ப வாழ்வே அமலனே நமச்சிவாயம்.

50. அடியருக்கின்மாகி அனைத்துயிர்க் கன்பராகி
மிடிவினையிடர்கடிந்தாய் மெய்யனே நமச்சிவாயம்.

51. மெய்யர்கள் மெய்யாதுய்யா வினைமறைத்துழலும் வஞ்சப்
பொய்யருக் கெட்டாதானே புனிதனே நமச்சிவாயம்.

52. நீறணிபவழக் குன்றே நிருத்தனே யொருத்த கங்கை
ஆறணிசடையினானே ஐயனே நமச்சிவாயம்.

53. ஆறணிசடையி னானே அப்பனே அன்பே அம்மை
கூறனே அறவெள்ளேற்றுக் கொடியனே நமச்சிவாயம்.

54. சித்தனே சிவனேயெங்கள் தெய்வமே தேவதேவே
அத்தனே ரறியா இன்ப அமலனே நமச்சிவாயம்.

55. பக்தர்கள் உள்ளக் கோயிற் பங்கயற் தினிது வீற்ற
மற்றவ ரறியா இன்ப அமலனே நமச்சிவாயம்.

56. கற்றவர்கல்லாதவர்க்கும் கருணை ஒன்றாகி மெய்யன்
பற்றவ ரறியாயின்ப அமலனே நமச்சிவாயம்.

57. நெற்றியினாட்டம் ஞானநிருத்த இட்டழைத்த மெய்யன்
புற்றவர்க் கின்பநல்கு மிறைவனே நமச்சிவாயம்.

58. நற்றவ நிதியே ஞானநடமிடு பதியே மெய்யன்
புற்றவர்க் கின்ப வாழ்வே இறைவனே நமச்சிவாயம்.

## இந்து சமய தத்துவங்கள்

கற்பூரம் எரிப்பதன் தத்துவம்: கற்பூரம் நெருப்பில் எரிந்து கரியோ சாம்பலோ இல்லாமல் மறைந்து விடுகிறது. அதுபோல் ஆன்மா இறைவனுடைய அருட்ஜோதியில் கரைந்து ஒன்றுபட வேண்டும் என்ற குறிப்பைக் கற்பூரம் உணர்த்துகின்றது.

தீதணையாக் கற்பூர தீபமென நான் கண்ட
ஜோதியுடன் ஒன்றி துரிசறுப்பது எந்நாளோ"

- தாயுமானவர்




# நயினை நாகபூஷணி அம்மன் திருவூஞ்சல்

ஸ்ரீ ம. அமரசிங்கப் புலவர்

காப்பு

சீர்பூத்த தென்னிலங்கை தன்னின் மேவும்
திரைபூத்த கடனயினை நகரில் வாழும்
ஏர்பூத்த நாகேசு வரியைப் போற்றி
இசைபூத்த செந்தமிழாலூஞ்சல் பாட
ஆர்பூத்த சடைமௌலி யரனா ரீன்ற
அருள்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
கார்பூத்த மும்மைத்த களிற்றின் பாதம்
கரம்பூத்த மலர்கொண்டே கருதி வாழ்வாம். 01

பலனோங்கு செம்பவளங் கால்க ளாக
பகர்வைர ரத்தினமே விட்ட மாக
குலனோங்கு வெண்டாளங் கயிற தாக
கூறரிய மாணிக்கம் பலகை யாக
வலனோங்கு மூஞ்சன்மிசை யினிது வைகி
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட் டாட்ட
நலனோங்கு திருநயினை நகரில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 02

உவகையொடு மலரயன் மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட பாலர் காப்ப
தவமறையோர் தூபமொடு தீபங் காட்ட
தாழ்ந்துகண நாதர்புகழ் மாலை சூட்ட
அவரிடப துவசமகள் வாணந் தூர்ப்ப
அனந்தன்முதலூர கர்செய செயவென் றார்ப்ப
நவையறுசீர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 03

கொம்பினொடு துடிமுரசு முழவா மோங்க
குடைகளுட னாலவட்டம் குழுமி யோங்க
தும்புருநா ரதர்வேத கீதம் பாட
தொண்டரக மகிழ்ந்துசுக வாழ்வு கூட
வம்பவிழு மலர்மாரி யமரர் பெய்ய
வரமுனிவ ரடிபரவி யாசி செய்ய
நம்புமடி யவர்க்கருளி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 04

அன்னநடை யயிராணி கவிதை தாங்க
அயிலைநிகர் விழியரம்பை களாசி யேந்த
வன்னமுலை யுருவசிவெண் கவரி வீச
மணிகொள்கிரு தாசிகமண் டலங்கைக் கொள்ள
மின்னிடைமே னகைவெளிலை பாகு நல்க
வியந்துதிலோத் தமைவிகித நடனஞ் செய்ய
நன்னயஞ்சேர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 05

மதிமுகமா லினிபனிநீர் வாசந் தூவ
மயிலைநிகர் சுகேசமல ரடிக ணீவ
விதிமுறைமங் கலைமுதலோ ராலஞ் சுற்று
வேதியர்தம் மகளிர்சுப வசனஞ் சாற்ற
அதிவினய மொடுசுமனை யாடி காட்ட
அன்பினநிந் திதைசுகந்த வருக்க நீட்ட
நதியுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 06


கோலமுறு வைரமணிச் சுட்டி யாட
குலவுமெழின் மாணிக்கத் தோடு மாட
வாலியமுத் தாரமொடு மதாணி யாட
வயங்குவளை தொடியுடனங் கதமு மாட
சாலவொளிர் பாடகமுஞ் சிலம்பு மாட
தண்டையொடு பாதசரந் தயங்கி யாட
ஞாலமுக மெனவிளங்கு நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 07

முந்துதவ மாதர்துதி கூறி யாட
முகமனொடு புனன்மாதர் முன்னின் றாட
வந்தனையோ டுரகமட மாத ராட
வரையிலுறை மாதரடி வணங்கி யாட
கந்தருவ மாதரிசை பாடி யாட
கருதரிய புவிமாதர் களிகொண் டாட
நந்துதவழ் கழனிசெறி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 08

ஆரணியே யம்பிகையே யாடீ ரூஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாடீ ரூஞ்சல்
பூரணியே புங்கவியே யாடீ ரூஞ்சல்
புராதனியே புராந்தகியே யாடீ ரூஞ்சல்
காரணியே காருணியே யாடீ ரூஞ்சல்
கன்னிகையே கண்மணியே யாடீ ரூஞ்சல்
நாரணியே நாயகியே யாடீ ரூஞ்சல்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 09

பனிவரையில் வருமுமையே பரையே போற்றி
பகருமற மெண்ணான்கும் வளர்த்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தணப்பில்பல சக்திவடி வானாய் போற்றி
இனிமைமிகு மாரமுதே கனியே போற்றி
எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்தாய் போற்றி
தனிகுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 10

ஆவாழி யந்தணரோ டரசர் வாழி
அரியதவ மகநிகமா கமமும் வாழி
தாவில்குல மங்கையர்கள் கற்பும் வாழி
சைவசமய முமறமும் தழைத்து வாழி
பாவார்வெண் ணீறுபஞ்சாட் சரமும் வாழி
பாடியவூஞ் சற்றமிழும் பாரில் வாழி
நாவலர்கள் புகழ்நயினை நகரும் வாழி
நாகபர மேஸ்வரியும் வாழி வாழி. 11





# "அப்பர் திருமுறை சுட்டும் மணிநாகேச்சரம் நயினையம்பதியே"

ஆய்வாளர்:
**இசைத்தமிழ் வேந்தர், சங்கீத கலாநிதி டாக்டர் நா.வி.மு. நவரெத்தினம்** M.Phil(SL), PhD (India)
*தலைவர் - இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

ஞானத்தின் திருவுருவான ஞானசம்பந்தர் சுவாமிகள் தாம் பாடிய நாகேஸ்வரப் பதிகத்தில் இராவணனைக் கூறவந்த செய்தியில் "ஓயாத அரக்கன் ஒடிந்தலற" என்ற தொடரில் "நாகேஸ்வரத் தாயே" என்று சுட்டுவர். இதன் வழி ஞாலத்தின் முகமாகக் காணும் நயினையம்பதியும் பண்டைய நாகேச்சரமும் ஈழத்தின் பிரதான திருத்தலம் என்பது அதன் நீண்ட பல வரலாற்றின் கண்காண முடியும்.

உலக நாகரிகத்தினதும் பண்பாட்டினதும் பிதாமகர்களாக விளங்கும் நாகர்வரலாறு மிக ஆழமானது. மணி நாக ஈஸ்வரத்தையும், மணிநாக தீவையும் மணிநாக அரசர்கள் நீண்டகாலம் பரிபாலனம் செய்தமை அவர்கள் வரலாற்றால் அறியக்கிடக்கின்றது. இவர்களுள் குகாதரனும் குலாதர நாகனும் முக்கியமானவர்கள். இராவணனது மாமனான மகாதுவட்ட நாகனும் மணிநாக முடியரசர்களுள் ஒருவானகவே வரலாற்றால் கூறப்படுதலைக் காணலாம். சிவ வழிபாட்டில் இவர்களது செயற்பாடுகள் உரைத்தற்கரியன. 'சாத்தனார் பெரியோள்' எனச் சுட்டும் மணிமேகலா தெய்வ பிரசன்னத்தில் மணித்தீவும் மணிப்பீடமும் முக்கியமாகக் காணப்படுகின்றன. இந்திரன் அமைத்த சக்தி பீடமே மணித்துவீபத்தில் பின்னாளில் மணியாசனப் போராக நாகரால் மேற்கொள்ளப்பட்டது. மணிபல்லவம், மணித்துவீபம், மணிபுரம், மணிநாகேச்சரம், மணிப்பீடம், நாகதீவு, நாகநயினாதீவு, நயினாதீவு என்ற பெயரால் அழைக்கப்படுவது இன்றைய நயினையம்பதியேயாகும். நாகதீவு எனும் சொல்லின் பாளிமொழித்திரிபே நயினாதீவு ஆகும்.

நாகேச்சரத்து இறைவன் நாகேஸ்வரன், நாக ராஜேஸ்வரன், நாகதம்பிரான், நாகநயினார், நாகேச்சரத்தான் எனவும் இறைவி நாகேஸ்வரி, ஸ்ரீபுவனேஸ்வரி, நாகராஜேஸ்வரி, நாகம்மாள், நாகபரமேஸ்வரி, சிவநாகபரமேஸ்வரி, ஏகசிவை, நாகஈஸ்வரி என்றும் இந்நாளில் (நாகத்தை அணிகலனாக அணிந்தவள்) நாகபூசணி என்றும் நாகம்பூசித்ததால் நாகபூஜிணி என்றும் அழைக்கப்படுதல் காணலாம்.


இத்தலத்தைக் கூறவந்த "சௌந்தர்யலகரி" மணித்துவீபசிந்தாமணிப்பீட வாசினியாக அன்னை ஸ்ரீபுவனேஸ்வரியைப் போற்றுதல் காணலாம். சியாமள தண்டம் மற்றும் பிரபஞ்ச உற்பத்தி என்ற நூல்கள் மணித்துவீபம் ஸ்ரீபுவனேஸ்வரியின் அளவற்ற கீர்த்திகளைக் கூறுவதும் காண்க.

தீர்த்தத்தால் அருங்கீர்த்தி மிக்க இத்தலத்தைத் தரிசிப்பவர்க்குப் போக பாக்கியங்களும், யோக பாக்கியங்களும் கிடைப்பது உறுதி. சாபவிமோசனம் பெற்ற போக தேவேந்திரன் மறுவாழ்வு பெற்று நாகேந்திரன் என்ற திருநாமம் பூண்டு அன்னை அருளால் எண்ணாயிரம் கோடி தேவர்க்கும், முப்பத்து முக்கோடி தேவாதிபதிகட்கும் தலைவனானான் என்பது மகாகவி நயினை ஸ்ரீநாகமணிப் புலவரது ஞானகாவியமான "நயினை மான்மியத்தால்" பெறப்படும் அரிய விடயங்களாகும்.

போக பாக்கியங்களாவன "தனு கரண புவன போகங்களை அனுபவித்தல்". இவை போக மோட்சம் என்ற பதத்தால் அழைக்கப்பெறும். நாத யோகியான ஸ்ரீமுத்துச்சாமி தீக்ஷிதர் தமது நவாவர்ண கிருதியில் "போக மோட்சம் பக்தர்க்கருள் புவனா" என ஸ்ரீபுவனேஸ்வரியைத் துதித்து நிற்றல் காண்க.

யோக மோக்ஷமானது யோகேந்திர பூபதியாக விளங்கும் ஆதிசேடனால் தரப்படுவது. அன்னையின் பேரருளில், திளைத்து தனது ஆயிரம் பணாமுடியை -ஐந்தலை அரவாகச் சுருக்கி ஊழியைக் கடந்து நின்று இன்றும் நயினையம்பதியில் ஆதிசேடன் போற்றி நிற்பது ஸ்ரீபுவனேஸ்வரியின் பீடமாட்சியை உலகம் காண வைக்கின்றது. ஆதிசேடனுக்குப் பதினான்கு உலகைத் தாங்கும் பதமும் பதஞ்சலியாகத் தில்லையில் யோக சூத்திரங்களை அருளும் பதமும் என்றும் நயினையில் நின்று பேரருள் வியப்பை காட்டும் பதமும் ஸ்ரீபுவனேஸ்வரியால் தரப்பட்டவை என்பதை மகாகவியின் ஞான காவியத்தில் ஆதிசேடன் அர்ச்சனை மாலையிற் காண்க.

ஊழி முதல்வனாயும் ஏழை பங்காளனாகவும் இறைவன் ஏக சிவசக்தி ரூபமாக அருள்மாட்சி நல்கும் தலம் இப்பதியேயாம். இப்பதிக்கு நிகரான தலம் ஒன்று ஒருமுகமாகப் பஞ்சபூதங்களாலும், மனிதர்களாலும்





போற்றி ஏற்றக்கூடிய முறையில் இன்றுவரை உலகில் காண இயவில்லை.

சப்தங்களின் தோற்றம் பற்றிக் கூறும் இசை நூல்கள் , சப்ததீவுகளை முதன்மைப்படுத்தும் செய்தி உணர்த்தற்கரியது. குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியாக நாவலந்தீவும் ஏனைய தீவுகளும் விளங்குவது காணலாம். ஏழிசையின் மத்ய (ஸ்ரீவித்யா) பீடமாகவும் ஸ்ரீவித்யா வாசனா பீடமாகவும் நயினாதீவு போற்றப்படுதல் காணலாம். நாவலந்தீவை அண்டிக் காணும் சிந்தாதேவியின் பீடம் - சுருதி மற்றும் இசைத் தோற்றங்களின் மூலமாகப் போற்றப்படுதல் சங்கீத கல்பத்ருமம் மூலம் அறியலாம். இப்பீடம் நாதாந்த பீடம், சிந்தாமணிப்பீடம், மணிப்பீடம், ஓசை ஒலிகளின் உற்பத்திப் பீடம் என இதன் வரையறைகளை எண்ணிலா இசைக்கிரந்த நூல்கள் சுட்டுதல் காணலாம். சிந்தாதேவியிடமிருந்து கிடைத்த அக்ஷய பாத்திரத்தை ஆபுத்திரன் இங்கேயே பொய்கையில் இட்டு ஜலசமாதியுற்ற வரலாறும் சிந்திக்கற்பாலது. மணிமேகலை தனது அக்ஷய பாத்திரத்தை இப்பெரியோள் உறையும் கோவில் பக்கத்தில் வைத்துத் தங்கியதாக மணிமேகலையும் சுட்டுதல் காண்க.

இத்தலம் பற்றிய காலநிர்ணயம் இந்திய சிற்ப அகழ்வாராய்வு நிபுணர்களால் (எஸ். நரசிம்மன்) 14,000ம் ஆண்டுகட்கு மேற்பட்டனவாகக் கருதப்படுகின்றன. உலகில் காணும் வேறு எந்த ஆலயத்திற்கும் நாக வழிபாடு மூலமான இத்துணை உயரிய சான்று கிடைக்கவில்லை என்பது தெளிவு.

தேவார முதலிகள் மூவரில் சம்பந்தர் பாடிய திருநாகேச்சரப் பதிகம் சுட்டும் தலம் குறிப்பாக காவிரியின் தென்பால் குறிக்கப்படுதல் காணலாம். ஆனால் இவர்களுள் மூத்தவரான அப்பர் சுவாமிகள் சுட்டும் நாகேச்வரப் பதிகங்கள் காவிரியின் தென்கரை நாகேச்வரத்தைச் சுட்டவில்லை என்பதும் அவர் சுட்டும் நாகேஸ்வரம் நாவலந்தீவின் தென்கிழக்கே காணப்படும். மணி நாகேஸ்வரத்திற்கு உரியன என்பதும் இங்கு கவனித்தற்பாலது.

**"நாவலம் பெருந்தீவினில் வாழ்பவர்
மேவிவந்து வணங்கி வினையொடு
பாவமாயின பற்றறு வித்திடும்
தேவர் போற்றிரு நாகேச்சரவரே**

**சந்திரன்னொடு சூரியர் தாமுடன்
வந்து சீர் வழியாடுகள் செய்த பின்
ஐந்தலை அரவின் பணி கொண்டருள்
மைந்தர் போல் மணிநாகேச்சரவரே**

**முறை முறையமரர் கூடி முடிகளால் வணங்கநின்ற
நறவமர் கழலர் போலும் நாகவீச்சரவனாரே
ஆர்த்து வந்துலகத்தவராடீருந்
தீர்த்தர் போற்றிருநாகேச்சரவரே**

**வேலை வாய் வந்தெழுந்த.....
நஞ்சணமிடற்றர் போலும்
நாகவீச்சரவனாரே
ஐந்தலையரவர் போலும்
நாகவீச்சரவனாரே"**

என்பது அப்பர் திருமுறைகள் மூலம் பெறப்படும் அரிய கருத்து நிதியங்களாகும். இக்கருத்துக்கள் ஏனைய தேவார முதலிகள் இருவராலும் முன்வைக்கப்படவில்லை. இவர்கள் பாடிய நாகேச்சரம் வேறு அப்பர் பாடிய நாகேச்சரம் வேறு என்பது பெறப்படும்.

அப்பர் பாடலின் வழி நாவலந்தீவில் உள்ள மக்கள் மேவிவந்து வழிபடக்கூடிய தலம் நயினாதீவே ஏனெனில் தரையிலே பயணம் செய்தலை மேவிவருதல் எனும் சொல் குறிக்காது. நீரின் வழியில் பயணம் செய்வோரையே மேவிவந்தோர் எனும் சொல் குறிக்கும். நாவலந்தீவின் தென்னகமாகிய தமிழகத்தில் உள்ள தமிழர்களும் நாகவழிபாட்டினரே அவர்களை நாகர்கள் எனும் பொருள்படும் "அரவம், அரவாடு" எனும் சொற்களாலேயே பிறஇனத்தவர் (ஆந்திரர்) வழங்குதலை இன்றும் காணலாம். எனவே நாக இனத்தைச் சேர்ந்த நாவலந்தீம் பொழில் தமிழர்கள் கடலிலே மேவிவந்து வழிபட்ட தலமாகவே "இம்மணி நாகேச்சரம்" விளங்கியது. இதனை மணிமேகலை முதலாய தமிழ்க் காப்பியங்களின் வழியறியலாம். 16ம் நூற்றாண்டில் தமிழக ஈழக்கரையோரங்களில் வளர்ச்சியடைந்த கிறிஸ்தவமும் தமிழர்களின் நாகேச்சர வழிபாட்டு நெறியையும், அவர்களது மணி நாகேச்சர வருகையையும், ஒட்டியே கச்சதீவில் அந்தோனியார் வழிபாட்டை ஏற்படுத்தி இருக்கலாம்.

அப்பர் பாடல் சுட்டும் நாவலம் பெருந்தீவு பற்றிய சிந்தனையும் குறிப்பாக மணிநாகேச்சரம் பற்றிய சிந்தனையும் ஐந்தலை அரவின் பணிகொண்டருள் சிந்தனையும் முறைமுறையமரர்கள் கூடி முடிகளால் வணங்குகின்ற சிந்தனையும் இங்கு விரிவாக ஆய்விற்குரியதாகின்றது.

நாவலம் பெருந்தீவைப் பற்றிய குறிப்புக்கள் பலவாறாக இருப்பினும் சுருதி தோற்ற இசைத் தோற்ற வரலாற்றில் அவற்றை நோக்குங்கால் சிந்தாதேவியின் பீடமாக மணித்துவீபம் போற்றப்படுதல் காணலாம். மணிமேகலையில் சாத்தனார் தாய்த்தெய்வத்தை "முதியோள்" எனப் போற்றுதலும் நக்கீரர் உமையம்மையைப் "பழையோள்" எனச் சுட்டுதலும் நயினை அம்பிகையைப் பிற்காலத்தவர் "பெரியோள்" என சுட்டுதலும் சிந்திக்கற்பாலது. சப்ததீவு கூட்டங்களுக்கு மேற்கில் பண்டையில் நாவலம் பெருந்தீவு




அமைந்திருக்கக் காணலாம். நாகேச்வரம் சப்ததீவுகளுள் முக்கிய பகுதியாகலாம். மணிமேகலையிலும் ஈழவேந்தன் பற்றிய குறிப்பிலும் நாவலந்தீவு காணப்படுகின்றது. குமரிக்கண்டத்தின் பெரும் பகுதியாக நாவலந்தீவு இடம்பெறுதல் காணலாம். கடற்கோள் இப்பகுதிகளை உருமாற்றியிருக்கலாம். ஆக நாகேஸ்வரம் இதில் எஞ்சிய பகுதிகளில் ஒன்றாகலாம். கிரேதா யுகத்தில் தேவர்களது வழிபாட்டின் இறுதிக்கட்டத்தில் ஆதிசேடனது வழிபாடு மிக முக்கியமான ஒன்றாக நாகேஸ்வரப் பதியைச் சங்கமித்து நிற்பது அப்பர் சுட்டும் "ஐந்தலை அரவின் பணி கொண்டருள் மைந்தர்" என்ற தேவார அடிகள் மூலம் பெற அதிக வாய்ப்புள்ளது. இவ்வாறான ஒரு கருத்தை ஏனைய தேவார ஆசிரியர்கள் விரிவாகச் சுட்டவில்லை என்பதும் இது நாகேச்வரத்தில் வழிபாடு இயற்றிய ஆதி சேடனை நினைவுறுத்துவதாகவே அமைந்துள்ளது என்பதுப் பெறப்படும்.

இதன் சாராம்சத்தை மகாகவி நயினை ஸ்ரீ நாகமணிப்புலவர் மிக அருமையாக "நயினை மான்மியத்தில்" அழுத்தமாகச் சுட்டி நிற்றல் காண்க.

அடுத்து, மிக முக்கிய பகுதி. அவை பற்றி முன்னர் மிகத் தெளிவாகப் பார்த்தோம். "மணிநாகேச்சரவரே" மணிநாகர் வழிபாட்டின் மூலவர் மணிநாகேச்சரச் சிவன் என்பதும் இக்கருத்து இதுவரை ஆராயப்படாத அரிய கருத்து என்பது இவ்வாய்வில் பெறப்படும். இந்திய வரலாற்றில், நாகர் வரலாற்றில் மணிநாகேச்வரம் என்பது மணித்துவீபமான மணிநாகதீவின் சிவாலயம் என்பது இங்கு உறுதிபடப் பெறப்படும் செய்தியாகும்.

"முறைமுறை அமரர் கூடி முடிகளால் வணங்கி நின்ற... நாகவீச்சரவனார்" தேவ கோனதும் அவர் குழாத்தினதும் வழிபாட்டுச் சிறப்பைக் கூறும் இடம் மணி நாகேச்வரம் என்பதும் இன்னும் "வேலை வாய்வந்து எழுந்த நஞ்சணி கண்டர்" என்றும் நாகவீச்சரவனார்க்கு அடையாளம் காட்டுபவர் பிறிதோர் இடத்தில் "ஐந்தலை அரவர்" நாகவீச்சரவனார் என்பதால் மூலலிங்கமாக நயினையம்பதியின் தோற்றம் முன்னிறுத்தப்படுகின்றது.


குறிப்பாக "நயினைமான்மிய" தீர்த்த மகிமை பற்றிக்கூறும் மகாகவி ஸ்ரீநாகமணிப்புலவர் இத்தலத்தின் தீர்த்த மகிமைக்கு இணையாக உலகில் வேறு தீர்த்தம் இல்லை என்பதை உறுதிபடக் கூறுவர்.

"அத்தா உன் அருள் நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்" என்பர் (அப்பர்). சமுத்திர தீர்த்தங்களால் சூழப்பெற்ற இத்துணை சிறப்பு சப்ததீவு மத்யவாசினிக்கும் சப்த சமுத்திர நித்ய வாசினிக்கும் உரியது என்பது இவண்கண் பெறப்படும். பண்டையில் உலகத்தவர்கள் யாவரும் ஆடிய தீர்த்தம் மண்ணவரும் விண்ணவரும் ஆடிய தீர்த்தம் நாகேச்வர தீர்த்தம் என்பது அப்பர் சுவாமிகளாலும் மகாகவி நாகமணிப் புலவரது நயினை மான்மியத்தாலும் உணர்த்தப்பெறுதல் காணலாம்.

பண்டைத் தமிழர்கள் நாகர்களே என்பது முடிநாகராயர், இளநாகனார் முதலாய பழந்தமிழ்ப் புலவர்களின் வழி அறியலாகும். தொன்மைத் தமிழ் இசை மரபின் மூலவர்களாக நாகர்களையே கொள்ளலாம். இதற்கான சான்றாகப் பரிபாடலே அமைகிறது. தமிழர்களின் நாகவழிபாட்டை பிற்காலத்தில் தமிழகம் உட்படச் சமண பௌத்தர்களும் வைதீக சமயத்தவர்களும் கைக்கொண்டார்கள் எனலாம். அதன் வழியாகவே தமிழர்களின்நாகவழிபாடுசிறந்தோங்கியமணிபல்லவமும் நாகதீபமாக பௌத்தர்களாலும் மணி நாகேஸ்வரமாக தமிழ்ச் சைவர்களாலும் மணி நாகர்களாலும் போற்றப்படுதலாயிற்றெனலாம். நாகவழிபாட்டினைப் பௌத்தர்கள் கைக்கொண்டமைக்கான சான்றுகளை மணிமேகலையில் தெளிவுறக் காணலாம். யாழ்குடாநாட்டைச் சேர்ந்த தீவாகவே மணிபல்லவம் அமைந்திருந்ததாகப் பேராசிரியர் சோ.நா. கந்தசாமியவர்கள் குறிப்பிடுவர். (பௌத்தம் ப. 19-20) சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு 1977) இது காறும் யாம் சிந்தித்தவற்றில் நாவலம்தீவோர் வழிபாடு ஐந்தலை அரவின்பணி கொள்நிலை "முறைமுறை அமரர்கள் முடி சாய்த்து வணங்கிய முதன்மை" தீர்த்த மகிமை முதலியன சுட்டும் அரிய பகுதிகள் யாவும் மணிநாகேச்சரம் எனப்படும் மணிநாகதீவின் பதியமர்ந்த இறைவனையும் அவன் சிவையுடன் ஐக்கியமாகி நிற்கும் பிற்கால ஸ்ரீநாகபூசணி அம்பாள் திருக்கோயிலையும் சுட்டுவது காணலாம்.

**உலகொடுவானும் தொழுதலால்**
**என்றென்றும் பற்றதாங்கருணை**
**பொழிதலால் அன்னை பராபரை**
**நாகபூசணியாள்**

(நயினை மான்மியம்)





# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கீர்த்தனைகள்

இயலிசை வாரிதி, கலாரத்னா, கலாபூஷண்
இணுவில், பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயா

ராகம் :- கல்யாணி    தாளம் :- ஆதி

பல்லவி

ஆதிலிங் கேஸ்வரனை அணைத்திடும் அம்பிகையே
மேதினியில் நயினையில் மேவும் நாகபூஷணியே.

அநுபல்லவி

பாதிமதி யணிந்திடும் பரமேஸ்வரன் சகியே
வேதியரின் வேதகோஷம் விரும்பிடும் கோமதியே.

சரணம்

ஆடிஅலை ஒடிவந்துன் அடிகளை நாடும்
பாடும் பக்தர் நெஞ்சினில் பரிந்துன் அருள் கூடும்
ஏடிலங்கும் நயினையில் என்றும் உன்பக்தர் கூடும்
சூடி மாங்கல்யம் மிளிரும் சுந்தரிநின் அருள்பாடும்.

1

ராகம் :- காம்போதி    தாளம் :- ஆதி

பல்லவி

வீணையேந்தி ராவணன் கானமிசைக்க அருளும்
வேணிமதி, சூடும்சிவன், விமலியே சரணம்.

அநுபல்லவி

காண நெஞ்சம் உருக்கிடும் நாகபூஷணி யம்மையே
பூணும் பன்னக பூஷணி புகலிடம் நீயே தாயே.

சரணம்

இமயமலை யரசன் புதல்வியே முதல்வியே
இணையடி மலர்களே இகத்தில் சரணடைந்தோம்
சமயமிது தானம்மா கருணை புரிவாய் தாயே
சங்கொலிக்கும் நயினைச் சுந்தரி நாகபூஷணி.

2

ராகம் :- ஸஹானா    தாளம் :- ஆதி

பல்லவி

கருணை வடிவழகி கழல் தொழுதேனம்மா
திருவளர் நயினையில் திகழ் நாகபூஷணி

அநுபல்லவி

அருள்வடி வானவளே அன்னை புவனேஸ்வரிநின்
திருவடியன்றிவேறு கதியிலேன் பார்வதி

சரணம்

செந்தமிழ் பாடல் கேட்டு சிந்தை உருகிடுவாய்
பைந்தமிழ் நயினையின் பார்வதி ஈஸ்வரி
உந்தன் பதமேயன்றி உலகினில் துணையுண்டோ
எந்தனுக் கிரங்கியருள் எழில் நாகபூஷணி.

3

ராகம் :- காபி    தாளம் :- ஆதி

பல்லவி

நயினை வளரும் தேவி - தாயே
நாகபூஷணியே ஏக நாயகியே.

அநுபல்லவி

அயில் விழியழகியே அம்பிகையே அருள்
சயிலக் கைலைநாதன் சவுந்தரி அந்தரி.

சரணம்

நீயே கதியல்லாமல் நீடுலகில் கதியுண்டோ
தாயே நாகபூஷணி தண்ணருள் தாருமம்மா
சேயே னைக்காத்தருள் சிவகாமி அபிராமி
வாயாரச் செந்தமிழால் வாழ்த்தியுனைப் பாடினேன்.

4

ராகம் :- சுபபந்துவராளி    தாளம் :- ஆதி

பல்லவி

நல்லபாம் பணிந்திடும் நாகம்மா - அம்மா
தொல்லைகள் நீக்குவாய் நீயம்மா.

அநுபல்லவி

எல்லையில்லா அருளின் அமுத சுரப்பியம்மா
கல்லையும் கரைந்துருக்கும் கருணைக் கடலம்மா.

சரணம்

தாயே நின் பதமல்லால் தரணியில் கதியுண்டோ
மாயே நாகபூஷணி மாநயினை வளர்தேவி
மாயன் சகோதரி மகேஸ்வரி ஈஸ்வரி
தூய அருள் பொழியும் துரந்தரி நிரந்தரி.

5

ராகம் :- ரஞ்சனி    தாளம் :- ஆதி

பல்லவி

அஞ்சலி அருள்பவளே அம்பிகையே தாயே
நெஞ்சினில் உறைபவளும் நீயல்லவோ தேவி.


அநுபல்லவி

கஞ்சவிழி யழகி கமலச் செம்பத வழகி
தஞ்சமடைந் தேனம்மா தாயே நாகபூஷணி.

சரணம்

அமுதத் தமிழ்பாட அருள் அள்ளிச் சொரிபவளே
குமுதவிதழ் அழகி குமுதினி அமுதினி
கமழும் நயினைவளர் கமலி நாகபூஷணி
நமதிடர் நீக்கிடும் நாயகி பூரணி

6





ராகம் :- பூர்விகல்யாணி
தாளம் :- ஆதி

பல்லவி

நாகபீசனை அணைக்கும் நாகபூஷ
ணி – தாயே
நாரணி ஆரணி காரணி – பூரணி.

அநுபல்லவி

கரவேல் எடுத்து அன்று கந்தனுக்குக்
கொடுத்தனை
பமேஸ்வரி நயினைப் பன்னாக பூஷணி.

சரணம்

பமலா் அன்றி யிந்த பார்தனில் கதியுண்டோ
நிதமும் உனை நினைந்து நெஞ்சாரப் பாடிநின்றேன்
அதமனாம் மகிஷனை வதம் செய்த நீலி நீயே
சதமென நின்னடி சரணடைந்தோம் தேவி.

7

ராகம் :- பாகே ஸ்ரீ  தாளம் :- ஆதி

பல்லவி

கடலலை தடுவிடும் நயினையிலே வளர்
அரவணி பூண்பவளே ஆதிபரமேஸ்வரி

அநுபல்லவி

திடமனம் அருளுவாய் தீன தயாபரி
படவர வணிந்திடும் பார்வதி ஈஸ்வரி

சரணம்

உன்னையல்லால் இந்த உலகினில் கதி உண்டோ
பன்னாக பூஷணி பாலித்திடுவாய் அம்மா – அருள்
அன்னையும் நீயல்லவோ அம்பிகே நாகபூஷணி
நின்னை நம்பினேன் அம்மா நிரந்தரி ஆதரி.

ராகம் :-  தாளம் :- ரூபகம்

பல்லவி

1. நயினையம்பதி வளரும் தாயே! – நாகபூஷணி
2 நளின மலரின் பதங்கள் நாடினேன்
கருணை புரிந்து ஆதரி – தேவி

அநுபல்லவி

1. அயிலை எடுத்துக் குமரனுக் கன்று
அருளிய ராஜ ராஜேஸ்வரி
2. கயிலைப் பதியில் காமசுந்தரி
காரணி ஆரணி நாரணி பூரணி

சரணம்

1. நாக படங்கள் குடையும் பிடிக்க
நவரஸகானம் குயிலுமொலிக்க
2 வேகக் கடலலை பரதம் நடிக்க
விளங்கும் மேகங்கள்
முரசமடிக்க
3. மோகச் சிவனைத் தழுவிடும் சிவ
காமசுந்தரி அந்தரி நிரந்தரி
4 போகக் கருடன் நாக மிணைந்து
பூம்பாதம் நாடிடும் ஷேத்திரமான

9

ராகம் :- சுருட்டி  தாளம் :- ஆதி

பல்லவி

நாடி மங்களம் அருள்வாள் நாகபூஷணி
பாடி அவள் பாதமலர் பாரினில் துணையெனவே

அநுபல்லவி

கூடி அடியா் செந்தமிழ் பாடிப் பக்தி செய்திடவே
ஆடி ஆடி வந்துநாக பூஷணி அருள் புரிவாள்.

சரணம்

இன்பமெல்லாம் நல்கிடுவாள் இகபர சுகங்களை
நன்பரா சக்தியவள் நாடிவந்து தந்திடுவாள்
அன்பு கொண்டு நயினையின் அம்பிகையைப் பாடிடுவோம்
துன்பமெல்லாம் அகன்றிடுமே துணையருள் கூடிடுமே.

10

ராகம் :- பூபாளம்  தாளம் :- ஆதி

பல்லவி

கும்பாபிஷேகம் காணவாரீா் – நயினை
அம்பா நாகபூஷணி அருள் சுரக்கும் காட்சி

அநுபல்லவி


வெம்பாவ வினை நீங்கும் விரும்பிடும் இன்பம் சேரும்
நம்பால் இரங்கி அருள் நாகபூஷணி அம்மையின்

சரணம்

வேத கோசம் ஒலிக்கும் பாதம் துதி பக்தர் பாடும்
கீத வொலி முழங்கும் நாதஸ்வரம் இசைக்கும்
ஆதி சிவன் மருவும் ஆனந்தி அம்பிகையின்
மாதவ நயினையில் கோலாகலம் சேர் விழாவாம் – கும்பா

# நயினை நாகம்மை

# திருக்குடமுழுக்காடற்பத்து



நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
மகோற்சவ சிறப்பிதழ்

கவிஞர்
நயினை, நாக. சண்முகநாதபிள்ளை

முன்னை முதல் நாகர்தொழ மூர்த்தமாம் மூலத்துள்
முகிழ்த்தெழுந்து முப்போதும் கருணை செய்த
அன்னையென அனுதினமும் அடியார் போற்றி
அகத்துள்ளே அருளுருவம் கண்டு நாளும்
பின்னைவரு சந்ததியும் பேறு பெற்றுப்
பெரிதுவந்து அடிபணிந்து தொடர வைத்த
இன்னமுதே நயினையுறை நாகம் மாளே
இன்பமுறக் குடமுழுக்கு ஆடீர் அம்மா. 1

அறுபத்து நான்குண்டாம் சக்தி பீடம்
அவற்றுள்ளே புவனேசு வரிக்காய் அன்று
நிறுவித்த இந்திரனுக் கிரங்கி நயினை
நிலைக்கின்ற பீடத்தில் அமர்ந்த தாயே
திருவுற்ற உன்னுருவத் தேசும் தெவிட்டாத்
தெய்வத்தாய் நின் அரவணைப்பும் தெளிந்து பக்தி
பெருகிற்று நயினையுறை நாகம் மாளே
பேறுதரக் குடமுழுக்கு ஆடீர் அம்மா. 2

ஆவினது மகனுக்கு "அட்சம்" தந்து
அடுத்துவந்த மேகலைக்குச் "சுரபி" தந்து
மேவிவரு அடியவர்க்கு அமுதம் தந்து
மேன்மேலும் பெருங்கருணை அள்ளித் தந்து
தேடிவரும் தொண்டர்குறை தீர்த்து ஆன்ம(ச்)
சித்தியுடன் முத்திபெற வைத்து இன்பம்
கோடிதரும் நயினையுறை நாகம் மாளே
குண்டலியே குடமுழுக்கு ஆடீர் அம்மா. 3

அலைபாயும் ஆழ்கடலில் அடியார் கூட்டம்
ஆர்ப்பரித்துக் கரையேறி அருளே சேர்க்க(த்)
தலைவாயில் கோபுரத்தின் முன்னே கூடித்
தம்வம்சத்தை இழந்துநின்று தாயே என்று
நிலையாய உன்னுருவம் நினைந்து உள்ளம்
நெக்குருக நின்றுருகும் தெய்வக் காட்சி
கலையாது நயினையுறை நாகம் மாளே
கண்பனிப்பக் குடமுழுக்கு ஆடீர் அம்மா. 4

ஐந்துதலை நாகங்கள் உன்னைச் சூழ
அவை நஞ்சை அடக்கியுயர் நிழலாய் ஆக்கி
இந்துவளர் சடைமுடியான் இருந்து கயிலை
இடப்பாகம் தான்தந்து காட்சி நல்க
அந்தமிலாப் பசிப்பிணியைத் தீர்க்கச் செய்யும்
அற்புதத்தை நினைந்தடியார் வாழ்த்தி ஏத்த
சந்தமுதம் நயினையுறை நாகம் மாளே
சாந்திபெறக் குடமுழுக்கு ஆடீர் அம்மா. 5

விண்ணின்ற பெருங்கருணை ஒளியாய் ஓங்கி
விரவிவரு காற்றூடு ஒலியாய் வந்து
பண்ணொன்றத் தீயுடு பரவி நீரில்
பக்குவமாய்த் திருக்குடத்தில் பாங்கு பெற்று
மண் ஒன்றி மூலத்தில் கர்ப்பம் எய்த
மந்திரமாய் இயந்திரமாய் மகிமை சேர்த்துக்
கண்ணொன்றும் நயினையுறை நாகம் மாளே
களிகூரக் குடமுழுக்கு ஆடீர் அம்மா. 6


பரந்தெழுந்த பலசமயப் பற்றும் உந்தன்
பாசமணி பல்லவத்தில் பற்றி நின்று
சுரந்துவரு உன் கருணை வெள்ளத் துள்ளே
சுகமுழுக்கு ஆடிடவே நின்றார் தாயே
சிரந்தழுவிப் பதம்சூடித் திக்கு எட்டும்
தித்திக்கும் அருளமுதம் பருக நிற்போர்
அரந்தைகெட நயினையுறை நாகம் மாளே
ஆனந்தக் குடமுழுக்கு ஆடீர் அம்மா. 7

தலமாண்டு சக்தியினைத் தேக்கி ஆண்டு
தகவாண்டு தண்ணளியும் தவிசும் ஆண்டு
பலவாண்டு பக்தர்களின் பரிசும் ஆண்டு
பாராண்டு பல்லுயிர்கள் பாலித் தாண்டு
குலமாண்டு சக்திமதச் சாக்தம் ஆண்டு
கூடுமடி யார்கள்குறை போக்கி ஆண்டு
நலமாண்ட நயினையுறை நாகம் மாளே
நவதீர்த்தக் குடமுழுக்கு ஆடீர் அம்மா. 8

உந்தனது சேய்களெலாம் உன்னை அன்றி
உற்றதுணை பற்றுவரோ தாயே அம்மா உந்தன்
சிந்தனையின் சிறப்பன்றோ இந்த நாட்டில்
செந்தமிழ் படுந்துயரம் அறிந்திலையோ
வந்தனைகள் உன்னடிக்கே ஆக்கி நின்றோம்.
வரம்தந்து எமைக்காத்து வாழவைக்கும்
பந்தமுடன் நயினையுறை நாகம் மாளே
பார்வதியே குடமுழுக்கு ஆடீர் அம்மா. 9

தம்பிரான்தன் அடிதொழுது நாகம் பூவைத்
தன்வாயில் எடுத்தலைகள் தாண்டி உந்தன்
செம்பாதம் சூடவரக் கருடன் ஊடே
சினமுற்ற செய்தியது கண்டு வணிகர்
நம்பகமாய் சமரசத்தை நாட்டி உருக்கன்
நடுக்கடலில் நிலைநிறுத்தி நாகம் பூவால்
அம்பிகையே அர்ச்சிக்க வைத்தாய் உன்னை
அப்பாம்பும் குடமுழுக்கு ஆட ஆடீர். 10

மூத்தவரும் இளையவரும் ஆட ஆடீர்
முழுத் தெய்வ வடிவங்கள் ஆட ஆடீர்
காத்துவரும் நவகோள்கள் ஆட ஆடீர்
காவலுறு கணங்களெலாம் ஆட ஆடீர்
கூத்துடையான் சிவனாரும் ஆட ஆடீர்
கோபுரத்தின் கலசங்கள் ஆட ஆடீர்
ஆத்தையரே நயினையுறை நாகம் மாளே
அருட்குடத்தால் குடமுழுக்கு ஆடீர் அம்மா. 11







# ஸ்ரீ நாகபூஷணியம்மை போற்றி மாலை



அருட்கவி சி. விநாசித்தம்பி


## காப்பு

ஐங்க ரத்தினின் அன்னைநா கேஸ்வரி
சங்க ரன்வலம் தழுவிய சாம்பவி
துங்க மாகடல் சூழ்நயி னாநகர்
தங்கு மாயவன் தங்கையைப் போற்றுவாம்

திருவளர் கைலை உமையே போற்றி 1
சிவநயி னாபரமேஸ் வரியே போற்றி
பிரணவ நாதனின் அன்னையே போற்றி
பேரம் பலச்சிவ காமியே போற்றி
சந்திர மௌலிச் சடையாய் போற்றி 5
தரளப் புன்னகை வதனியே போற்றி
செந்துவர்ப் பரிமள வாயினாய் போற்றி
திருநீ றொளிர் பசும் மேனியாய் போற்றி
குங்கும சந்தன நுதலினாய் போற்றி 9
குண்டலம் திகளும் காதினாய் போற்றி
தங்கரத் தினவளைக் கையினாய் போற்றி
தபனமா ணிக்கமூக் குத்தியாய் போற்றி
சிவனணி மங்கலக் கன்னியே போற்றி 13
சிற்பர சுடர்க்கணை யாழியாய் போற்றி
துவளொட் டியாணத் திடையாய் போற்றி
சொற்பதங் கடந்தபூந் துகிலாய் போற்றி
பராபர தனக்கச் சுடையாய் போற்றி 17
பண்ணெழு சிலம்பொலி பதத்தாய் போற்றி
சராசரம் குளிரருட் கண்ணினாய் போற்றி
தண்ணிய வேயுறு தோளினாய் போற்றி
நளினமும் கலசலமும் ஏந்தினாய் போற்றி 21
நலமுயர் பாசாங் குசத்தாய் போற்றி
கவினுரு வளர்விரல் நகத்தாய் போற்றி
ஓங்கா ரஓசை ஒலியே போற்றி 25
ஓம்ஐம் ஹ்ரீம்ஸ்ரீம் உருவே போற்றி
நீங்காத ஸ்ரீசக் கரத்தாய் போற்றி
நிலைபெறும் ஐந்தொழில் புரிவாய் போற்றி
மொழியுமைம் பத்தோர் எழுத்தே போற்றி 29
முற்படு குண்டலி சத்தியே போற்றி
சுழலும் மூலமார் ஸாகினி போற்றி
சுவாதிட் டான காகினி போற்றி
மணிபூ ரகத்து லாகினி போற்றி 33
மருவிய அநாகத ராகினி போற்றி
அணிதரு விசுத்தி டாகினி போற்றி
ஆக்ஞா சக்கர ஹாகினி போற்றி
துவாத சாந்தநீள் வெளியே போற்றி 37
துரியா தீதச் சுடரே போற்றி
திவாகர சகஸ்ரபீ டத்தாய் போற்றி
சிந்தனைக் கடங்காச் சிகரமே போற்றி
பதினா றாறுதத் துவமே போற்றி 41
பயிலும் தத்துவத் தெளிவே போற்றி
சதுர்மறை உச்சியின் ஞாயிறே போற்றி
சாற்றிடும் ஆகம ரூபியே போற்றி
வழங்குமெண் ணெண்ணா சனத்தாய் போற்றி 45
மணித்தீ வமர்புவ னேஸ்வரி போற்றி
முழங்குகண் ணகிக்கருள் தந்தாய் போற்றி
முகுந்தன் அழைப்பேற் றிருந்தாய் போற்றி
நயனார் பூசனை நயந்தாய் போற்றி 49
நன்மா நாய்கர்க் கருளினாய் போற்றி
சுயம்புவாய்த் தோன்றிய சோதியே போற்றி
தொழுமர வத்தினுள் மிளர்வாய் போற்றி
ஆலமர் பொந்தினுள் அமர்ந்தாய் போற்றி 53
அமரரின் பூசனைக் கிசைந்தாய் போற்றி
ஆலயம் வளர்நிதி கொடுத்தாய் போற்றி
ஆதிகோ முகிநீ ராடினாய் போற்றி
நாகசா பந்தீர்த் தணிந்தாய் போற்றி 57
நாகர்தா லாட்டத் துயில்வாய் போற்றி
நாகதோ ஷ த்தை யகற்றுவாய் போற்றி
நாவில் கலைவளம் இயற்றுவாய் போற்றி
மணிமே கலைதுயர் நீக்கினாய் போற்றி 61
வருமிந் திரன்பழி போக்கினாய் போற்றி
அணிதவ சித்தரை வளர்த்தாய்போய்
அமுத சுரபியை அளித்தாய் போற்றி
மால்புகழ் சிற்பரத் தங்கையே போற்றி 65
வடக்கா டாடிய மங்கையே போற்றி
கோல்கொடுத் தானொரு பாதியே போற்றி
கோள்நா ளியக்கும் சோதியே போற்றி
கும்பிடு மமரரைக் காத்தாய் போற்றி 69
கூர்வடி வேலனை அணைத்தாய் போற்றி
சும்பன் நிசும்பனை வதைத்தாய் போற்றி
தொடர்சண் டமுண்டரைச் சிதைத்தாய் போற்றி
பண்டா சுரசங் காரியே போற்றி 73
பரமகா மேசரின் லலிதையே போற்றி
திண்டோள் மகிஷனைத் துணித்தாய் போற்றி
தென்திசை மறலியை உதைத்தாய் போற்றி
அம்புலி காட்டிய அபிராமி போற்றி 77

* அகுல சகஸ்ரா ரத்தாய் போற்றி
கொம்பனைக் காவலன் ஆக்கினாய் போற்றி
கோகுல வண்ணனைச் சபித்தாய் போற்றி
பால்கொடுத் தருட்பாட் டுவந்தாய் போற்றி 81
பண்தா ளத்தொலி கொடுத்தாய் போற்றி
நாலெட் டறங்கள் புரிந்தாய் போற்றி
நவிலெண் ணெண்கலை யருளினாய் போற்றி
தக்கனின் வேள்வி தடிந்தாய் போற்றி 85
சைவ நீதிகள் மொழிந்தாய் போற்றி
மிக்க மலைமகள் ஆனாய் போற்றி
வியன் தமிழ் ஆட்சி நடத்தினாய் போற்றி
பாடிப் பரவுவார் மனத்தாய் போற்றி 89
பனிமலர் சூடுவார் சிரத்தாய் போற்றி
நாடும் வரமெலாம் சுரப்பாய் போற்றி
நமனணு காமல் தடுப்பாய் போற்றி
இல்லறச் செல்வம் நல்குவாய் போற்றி 93
இனியசந் தானமும் தருவாய் போற்றி
நல்லறி வின்பமும் காட்டுவாய் போற்றி
ஞானமும் யோகமும் கூட்டுவாய் போற்றி
நோய்மிடி வஞ்சனை ஓட்டுவாய் போற்றி 97
நுண்சிவ சிந்தனை ஊட்டுவாய் போற்றி
வாய்மனம் செயல்பழி தீர்ப்பாய் போற்றி
மலரடி யிணை நிழல் சேர்ப்பாய் போற்றி
எங்கும் நிறைந்த இறைவியே போற்றி 101

* (அகுலாயை நம)




இலிங்க சதாசிவ மனோன்மணி போற்றி
சிங்கம் மேவிய துர்க்கையே போற்றி
செங்கம லாசனத் திருமகள் போற்றி
படிக நிறுத்துப் பாரதி போற்றி 105
பாஸ்கர காயத் திரியே போற்றி
திடமிகு சாவித் திரியே போற்றி
சிவாம்ச நாகபூ ஷணியே போற்றி. 108

பொன்னிறை நயினைநாக பூஷணித்தாயே நின்றன்
சொன்னய நாமம்பாடித் தோத்திரம் செய்தோம் அம்மா
பின்னமில் லாதவாழ்வும் பெருநெறி பயிலும்மாண்பும்
அன்னையே அருள்வாயம்மா அடைக்கலமுனக்கே போற்றி.

நூற்பயன்

அன்னையாம் நயினைமேவும் அருள்நாக பூஷணித்தாய்
பொன்னடித் தோத்திரங்கள் புந்திவைத் தோதினோர்கள்
முன்னிய வரங்கள் பெற்று முற்பவ வினைகளோய்ந்து
நன்னெறிக் கதிகள்பொங்கி நலமிக வாழுவாரே.

## நாகர்களது குடியிருப்பு


விசயனின் வருகைக்கு முந்திய காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாடும் அயலிலுள்ள தீவுகளும், திருமலை, வன்னி, மன்னார், மற்றும் கிழக்கு மேற்குக் கரையோரப் பட்டினங்களும் நாகர்களது குடியிருப்புக்களாக இருந்தன. யாழ்ப்பாணக் குடாநாடும் அயல்தீவுகளும் 'நாகதீபம்" என்ற பெயருக்கேற்றவாறு, கதிரமலையில் தனது தலைநகரைக் கொண்ட, ஒரு நாகர் அரசின் கீழ் இருந்தன. முதலியார் திரு.செ.இராசநாயகம், தமது "யாழ்ப்பாணச் சரித்திரம்" (1993) என்னும் நூலில் இதனை அறுதியிட்டுக் கூறியுள்ளார். "இத்தீவுகளிலும், இலங்கையின் மேற்பாகத்திலும், சரித்திர காலத்துக்கு முந்தியே நாகர் எனும் ஒரு சாதியார் குடியேறியிருந்தனர். இத்தீவுகளுக்கு இப்போது கந்தரோடை என்று அழைக்கப்படும் கதிரமலையே இராசதானியாகவிருந்தது."

## இந்து சமய தத்துவங்கள்

சிவமூர்த்திக்கு நான்கு சக்திகள் உண்டு.

1. அருள் சக்தி - பார்வதி
2. போர் சக்தி - காளி
3. கோப சக்தி - துர்க்கை
4. புருஷ சக்தி - விஷ்ணு

எனவே, சிவசக்தி நான்கினுள் திருமாலும் ஒரு சக்தியாகும். 'அரியில்லாமல் தேவியில்லை. ஐயன் ஐயாரனார்க்கே' என்பது அப்பர் வாக்கு.





உ

# நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மை



## திருப்பள்ளியெழுச்சி



**நயினாதீவுச் சாமியார்**

போற்றிலும் உமாபர மேஸ்வரி அன்னையே
பொழுது புலர்ந்தது பரவுநின் மேனியின்
நீற்றொளி வளர்முக மலர்நகை கொண்டுன்
நிரைகழல் நினைந்துளம் நெகிழ்ந்தடி தொழுதோம்
நாற்றிசைக் கடல்மகள் வலம்புரி இயம்பினள்
நயினா நகருறை நாகபூ ஷணியே
தோற்றமும் முடிவு மில்லாக் கைலையின்
சுந்தரி யேபள்ளி எழுந்தரு ளாயே. 1

தாமரை யவிழ்ந்தன தபனனும் எழுந்தான்
தாரகை மழுங்கின குருகினம் இசைத்தன
தேமது ரப்பண் பாடினர் பாவலர்
தேவரும் முனிவரும் விருதுகள் ஏந்தினர்
நாமபா ராயணம் நவின்றனர் வேதியர்
நயினா நகருறை நாகபூ ஷணியே
ஓமெனு மந்திரத் துள்ளொளி விளக்கே
உத்தமியே பள்ளி எழுந்தரு ளாயே. 2

காலம் சொலற்கரும் காலக் கருவாய்க்
கருணைப் பகவான் புத்தரின் வருகைமுன்
மூலப் பொருளாய்த் தோன்றிய முதல்வியே
முந்திய முதுமறைச் சொற்பொரு ளுணர்த்தி
ஞாலமேன் மக்களை நற்கதிக் கேற்றிடும்
நயினா நகருறை நாகபூ ஷணியே
ஆலமர் பொருந்துவைத் திமையோர் வழுத்திய
ஆரமுதே பள்ளி எழுந்தரு ளாயே. 3

இந்திரன் பழியறப் பாற்கடற் றுயின்றோன்
இலக்குமி யொடுவந் துனைவர வழைக்கச்
சிந்தைகொள் சிந்தா மணித்தவி சிவர்ந்து
திருவருள் நயந்த சிவசங் கரியே
நந்தினம் இசைக்க நாரைகள் நடிக்கும்
நயினா நகருறை நாகபூ ஷணியே
சந்ததம் ஐந்தொழில் நாட்டியம் ஆடிடும்
தவமயி லே பள்ளி எழுந்தரு ளாயே. 4

ஆதிசா பந்தீர்த் தராவினைப் புனைந்தாய்
அரனுடன் திரிபுர பைரவிப் பீடமோடு
ஓதிடும் புவனேஸ் வரிப்பீ டத்தே
ஓரைந் தலைப்பன் னகத்தினு ளிருந்து
நாதவிந் துகலைப் போதனை வழங்கும்
நயினா நகருறை நாகபூ ஷணியே
பூதமைந் தாகிச் சராசரம் புரக்கும்
பூரணியே பள்ளி எழுந்தரு ளாயே. 5

எண்ணரும் எழுவகைப் பிறவிக ளியற்றுவை
ஏழாற் றிடைமிதந் துனையடைந் தவரைப்
புண்ணிய வரவும் புதுக்கணக் கெழுதிப்
போதமும் வீடும் புகுத்தியாண் டருள்வாய்
நண்ணினர் மனக்கண் மணியே கற்பக
நயினா நகருறை நாகபூ ஷணியே
பண்ணிசை பாடுமா றணிமுலைப் பால்தரும்
பார்வதி யேபள்ளி எழுந்தரு ளாயே. 6

உடலெனும் மனைக்குள் ஓங்கிய மலையே
உயிருக் குயிரே உபநிடத் துச்சியே
நடுவெளி பரந்த துரியா தீதமா
நயந்தரு சிற்சபை எனப்புலி பதஞ்சலி
நடனங் காணிய வந்துவந் திஞைசும்
நயினா நகருறை நாகபூ ஷணியே
திடமிகு மடியருக் கருளமு தளிக்கும்
திரிபுரை யேபள்ளி எழுந்தரு ளாயே. 7

மாயவன் திருமகள் வாரணன் முருகன்
வாணி சதுர்முகன் அரிகர புத்திரன்
ஆயிமீ னாட்சிமா காளி வைரவன்
அணிவீ ரபத்திரன் வாயிலுற் றமர்ந்தனர்
நாயக கோள்நாள் பணிகொள நின்றனர்
நயினா நகருறை நாகபூ ஷணியே
தாயசைக் காவிடில் உயிரினம் வாழுமோ
தயாபரை யேபள்ளி எழுந்தரு ளாயே. 8

மேவுமா நாய்கர் சந்ததி அமைத்த
விண்ணுயர் கோபுரக் கோயிலில் அமர்ந்தனை
மூவிரு தீவக நடுவே சுழுமுனை
முற்படு சகஸ்ர கமலம் சொரியும்
நாவுணர் அமுத சுரபியாய்த் திகழும்
நயினா நகருறை நாகபூ ஷணியே
காவிய ஓவியக் கற்பனைக் கடங்காக்
களஞ்சியமே பள்ளி எழுந்தரு ளாயே. 9

தென்னைமா வருக்கை கதலிச் சோலையின்
தேன்பழச் சாறெலாம் கோமுகி புகுந்து
மன்னுமா நிரைபொழி பாலுடன் பெருக
மறையவர் முகந்து மஞ்சன மாட்டும்
நன்னெறித் தீர்த்தமுண் டடியவர் சுகம்பெறு
நயினா நகருறை நாகபூ ஷணியே
பொன்னெடுங் காசிப் பதிப்பே றுதவிடும்
புராதனியே பள்ளி எழுந்தரு ளாயே. 10


வந்திடு மடியவர் முறையிடும் குறைகளை
மழவிடை நாகேஸ் வரனிடத் தியம்பி
மந்திர வாக்கே நோக்கிய மங்கையாய்
வரம்பல கொடுக்கும் நாகேஸ் வரிநீ
நந்தன மலர்கொடு நாகம் வழிபடும்
நயினா நகருறை நாகபூ ஷணியே
சுந்தரத் திடைநஞ் சணிந்தவன் மருவிய
கௌலினி யேபள்ளி எழுந்தரு ளாயே. 11

பூப்பதும் உலகெலாம் பொருந்திய வளங்கள்
புரிவதும் பதினா றாயபே றுதவிக்
காப்பது மாகிய பொறுப்புக ளுடையாய்
கயலுறு திருக்கண் வளர்வது முறையோ
நாப்பயில் நின்கழல் பாடினோம் பணிந்தோம்
நயினா நகருறை நாகபூ ஷணியே
பாப்பணி அப்பருக் கிலச்சினை பொறித்தோன்
பத்தினி யேபள்ளி எழுந்தரு ளாயே. 12

மலர்கொண ரரவை வழிமறி கருடனின்
வாக்கின் படிசெயும் வணிகனுக் கருளினை
தலமணி மேகலை கண்ணகி இராவணன்
தனஞ்சயன் இருடிகள் வழிபடப் பெற்றனை
நலமுயர் * முத்துக் குமாரசா மிக்கருள்
நயினா நகருறை நாகபூ ஷணியே
மலவிருள் நீங்கச் சிவகதிர் காட்டும்
மானோன்மணி யேபள்ளி எழுந்தரு ளாயே. 13

உளமுடைந் தடியார் உனையடைந் துருகினால்
ஒளிர்நகை யாலே இடர்களை பவளே
அளவரும் நவமணித் தேரினில் வலம்வந்(து)
ஆனிப் பூரணைத் தீர்த்தமும் தருவாய்
நளினத் தொடுசெந் நெல்வயல் விளையும்
நயினா நகருறை நாகபூ ஷணியே
இளமதிச் சடையனை வலமிருந் தணைக்கும்
இலஞ்சிய மேபள்ளி எழுந்தரு ளாயே. 14

ஆனினம் அந்தணர் நான்மறை ஆகமம்
அருட்புரா ணங்கள் திருமுறை சிறக்க
வானுறு மாரியும் வளங்களும் செழிக்க
மாணுறு சிவனடி யாரினம் பெருக
ஞானமும் கல்வியும் நீதியும் பொலிய
நயினா நகருறை நாகபூ ஷணியே
தானமும் தவமும் புரிந்துணர் வூட்டிய
சாந்தினி யேபள்ளி எழுந்தரு ளாயே. 15


நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
மகோற்சவ சிறப்பிதழ்

# நாகபூஷணி அம்மா...

த. மனோகரன்
உபதலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்


நயினையிற் கோயில்கொண்ட நாகபூஷணி அம்மா
எங்கள் மனக்குறையைத் தீர்த்திடவே வந்திடுவாய்யம்மா
அழகுரதம் ஏறியுலா வரும் சக்தியம்மா
அச்சமற்று நாம் வாழவழி காட்டியருளுமம்மா


நிம்மதியை நாடிநாளும் இறைஞ்சு கிறோம்
நின்கருணைப் பேரருளே யதைத் தந்திடட்டும்
பாரினிலே உன்கருணை பெருகிவிட்டால்
ஏதெமக்கு தொல்லை தரும் பகைமை யெல்லாம்

வாடிநிற்கும் எங்களையும் பார்த்திடம்மா
வந்துஅருள் வழங்கிட நீ தயங்கு வதேன்
நாடுகிறோம் உன்னடியை நாமெல்லோரும்
நல்லவளே இரங்கியெமக் கருள்தருவாய்

பிறந்துவிட்டோம் வாழ்ந்திட நாம் அச்சமின்றி
பெருமகளே தணையிருந்து வழிகாட்டிடம்மா
இறந்துபட்டுப் போவதுதான் உண்மையாகும்
இருக்கும்வரை இவ்வுலகில் நீயே காவல்

ஆடுகின்ற அண்ணல்அவன் எங்கள் தெய்வம்
அவனுக்கும் சக்தியூட்டி ஆட்டும்தாயே
போதுமம்மா நாம் அடைந்த துன்பமெல்லாம்
பொறுமையினைக் களைந்தெறிய வாராய்தாயே.





நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
மகோற்சவ சிறப்பிதழ்

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்



## திருப்பள்ளியெழுச்சி



கவிஞர் திருவேரகன்

ஆச்சியே அகிலம் ஆண்டிடும் முதலே
அன்பரின் உளத்துளே அகப்படும் சிவையே
ஓச்சியெம் உணர்வினை ஊக்கிடும் உமையே
உள்ளொளி பரப்பிடும் ஒப்பிலா ஒளியே
பாச்சிடும் ஒளி முதல் சூரியன் உன்னைப்
பணிந்தெழக் குணதிசை காத்துமே நின்றான்
நாச்சியே நயினையின் நாகபூ ஷணியே
நாரணி யேபள்ளி எழுந்தரு ளாயே. 1

அறிதுயில் மூலமும் அர்த்தமும் சாமமும்
அனைத்தும் அறிந்திடும் ஆரணி அமிர்தை
செறியருள் பயிலுயிர் திகழ்வளம் செழிக்கத்
திருமுக நயனம் திறந்து கடைக்கண்
குறிதவ விழிப்புக் குவலயம் எங்கும்
குதுகலம் அடைந்துயர் வெய்தி மரை
நெறிவளர் நயினையின் நாகபூ ஷணியே
நிரந்தரி யேபள்ளி எழுந்தரு ளாயே. 2

அனைத்துயிர்ப் பூப்பும் ஆர்ப்பரிப் போடு
ஐம்பொறி பூதமும் வேதமும் கலைகளும்
நினைப்புகல் கொண்டு நித்தமும் செழிக்க
நிறைநலம் பெருகிட நின்துணை வேண்டி
முனைப்புற நின்பத மலரிணை தொழுது
முழுமையாய்க் காத்திடு வாயென நின்றார்
இணைப்புயர் நயினையின் நாகபூ ஷணியே
எழிலி யேபள்ளி எழுந்தரு ளாயே. 3

இந்திரன் வந்தனன் மேகலை வந்தாள்
இன்னமு தூட்டிய ஆமகன் வந்தான்
வந்தனை செய்திடப் புத்தரும் சித்தரும்
வணிகரும் பிறமத வருணரும் சூழ்ந்தார்
செந்தமிழ்ப் பாவொடு உன்னடி தொழுதோர்
செவ்வியர் நயினையூர்ச் சிறந்தவர் சேர்ந்தார்
அந்தமில் நயினையின் நாகபூ ஷணியே
அம்மையே பள்ளி எழுந்தரு ளாயே. 4

காணிக் கைதொட்டில் பிள்ளையும் காசும்
கருமையும் செம்பாம் பாகிய உருவும்
பேணித் தாம்வை நேர்த்திகள் செய்யப்
பிரியமாய்க் கொணர்ந்த வெள்ளிபொன் அணிகளும்
ஆணிப் பொன்னே நின்ஆலயத் துள்ளே
அழுதும் தொழுதும் ஏந்தியே வந்தார்
ஆனிசூழ் நயினையின் நாகபூ ஷணியே
அநாதி யேபள்ளி எழுந்தரு ளாயே. 5


விடியலை வேண்டி விரைந்திடும் மானுடம்
விடுதலை பெற்றிட உனைவேண் டிடல்போல்
படிமிசை உன்கடற் பரப்பினில் தென்றலும்
பரந்துள வேப்ப மரநிழற் சுகந்தமும்
முடியெழு கோபுரக் கலசமும் ஓமென
முகிழ்த்திடு பூபா ளஇசையும் எழுப்புது
அடிதொழு நயினையின் நாகபூ ஷணியே
ஆதியே பள்ளி எழுந்தரு ளாயே. 6

மங்கள மகளிரும் சக்திகள் மூர்த்தமும்
மனதுறச் சித்தியும் முத்தியும் பெற்றிடக்
குங்கும சந்தனக் குளிப்பெனச் சோதியாய்
குளிர்நில வொளியினில் குதுகல முறுவலில்
இங்கிதம் பொங்கிட இருகரம் கூப்பி
எழுந்தருட் திருகத வதன்முனே முகிழ்த்தார்
தங்கமே நயினையின் நாகபூ ஷணியே
தயாபரி யேபள்ளி எழுந்தரு ளாயே. 7

நாகமும் பூவொடு படமெடுத் தாட
நவையறு வேதம் அந்தணர் ஓத
தாகமாய்ச் சிறுவரும் தாய்புகழ் பாட
சாமக் கோழிகள் மணிகளும் ஆர்ப்ப
ஆகமம் அனைத்துள அந்தரி யோகம்
அநுட்டா னமாக வந்தனம் அம்மா
ஏகமாய் நயினையின் நாகபூ ஷணியே
ஈஸ்வரி யேபள்ளி எழுந்தரு ளாயே. 8

இருட்டறை மூலையில் துயிலும் கிழவியே
ஈர்க்கும் குண்டலி சக்தியை எழுப்பி
மயக்கும் மாயையை நீக்கி எம்முளே
மலர்ந்திடும் சோதியும் சோதியைத் துலக்கி
பொருப்புடைக் கயிலை நாதரும் நீயும்
புந்தியில் வந்து நெருங்கிப் பொருந்தி
அருளிடு நயினையின் நாகபூ ஷணியே
ஆயிழை யேபள்ளி எழுந்தரு ளாயே. 9

உந்தன் நயினையில் ஒருதரம் பிறந்துமே
உன்னடி தொழுதொழ விருப்புடன் நின்று
தந்தம் விண்ணப் பங்களைத் தந்துமே
தலையாய்ப் பணிகொளு மாறதும் கேட்டார்
அந்தமும் ஆதியும் இல்லா அணங்கே
அனைவரும் உய்ய இரங்கி அருள்க
சிந்தையில் நயினையின் நாகபூ ஷணியே
சீர்த்தி யேபள்ளி எழுந்தரு ளாயே. 10





# பார்த்தனின் மைந்தனும் பப்பரவன்சல்லியும்

சிவமேனகை

அலையோடு கடல் வந்து தாலாட்டிடும் கரையினில்
கலை பொழில் நயினையில் உருக்கொண்ட தாயவள்
நிலை பெறும் புனித மருதமும் நெய்தலுமே ,, நம்
தலை முறை தோன்றிய நாக பப்பரவன் அல்லி மண் !!

இதிகாசங்கள் புராணங்கள் காப்பியங்கள் பின்வந்த இலக்கியங்கள் எனப் பல்வேறுபட்ட வரலாறுகளுக்கு மண்வாசனை கொடுத்திருக்கின்றது நயினாதீவு. இந்த வாய்ப்பு இன்றைய இந்தத் தீவு இருக்கும் பகுதிக்குக் கிடைத்ததற்குக் காரணம் இந்தியாவில் இருந்து வரும் கடல் வழியில் இந்து சமுத்திரத்தின் தலை வாசலில் அமைந்து இருப்பதா...? அல்லது குமரிக் கண்ட அழிவுகளின் பின் தனிச் சிறப்புப் பெற்ற இடங்களில் ஒன்றாக இருந்து தமிழன் வரலாற்றை மீளவும் கட்டி எழுப்பிய பெருமை உடைய நகரங்களின் தலை நகராக இருந்ததா...? அல்லது ஆதிசக்தியின் ஆலயத்தை அகத்திற் கொண்டு இருக்கும் தனிச் சிறப்பா...? என்று பல்வேறு கோணங்களில் சிந்திக்கத் தோன்றுகின்றது .


இதிகாச, புராண, இலக்கியங்களில் பல இடங்களில் இந்தத் தீவினதும், தீவு சார்ந்த பகுதியினதும் வரலாற்றுச் சிறப்புக்களும் சம்பவங்களும் கதைகளில் உள்வாங்கப்பட்டு இருக்கிறது. அந்தவகையில் இன்றைய இந்தக் கட்டுரையில், மகாபாரதத்தில் வரும் இந்தத் தீவும் - தீவு சார்ந்த பகுதிகளினதும் வரலாற்று அம்சங்களையும் அதனோடு சம்பந்தபட்ட மக்களின் வாழ்வியற் தொடர்புகளையும், அந்த நிகழ்வுகளின் ஆதாரமாக இன்றும் நிலைத்து இருக்கும் ஆதாரச் சான்றுகளையும், இந்தக் கட்டுரை மூலம் வெளிக்கொண்டுவர முயற்சிக்கின்றேன்.

உலகில், ஆதிகாலத்தில், நாகர்கள் வாழ்ந்த பகுதியாகக் கருதப்படுவது இன்றைய வடகிழக்கு இந்தியாவின் பகுதிகளில் இருந்து, இன்றைய தமிழ்நாட்டுப் பகுதிகளோடு இணைந்த குமரிக்கண்டத்திலும், அதனோடு இணைந்த ஈழத்தின் மகேந்திரமலை வரையான பகுதிவரை நாகர்கள் வாழ்ந்ததாகப் பல வரலாற்று ஆசிரியர்கள் கருத்துக்களை முன்வைத்து இருக்கின்றார்கள்.

ஈழத்தின் வீரமகேந்திரபுரம் என்று சொல்லப்படுகின்ற இன்றைய அம்பாந்தோட்டைக்குக் கீழே தண்ணீரில் மூழ்கிய இடத்தில் சூரன் இராவணன் முதலானோர் ஆண்ட இராசதானியும், இது இன்றைய இலங்கையின் மத்தியில் இருக்கும் சிவனொளிபாத மலையையும் உள்ளடக்கிய மிகப் பெரிய மலைத்தொடரான மகேந்திர மலையின் முக்கியபகுதியாக விளங்கியது. அடுத்து மணிமலை என்று சொல்லப்படுகின்ற தென்னிந்தியாவின் சில பகுதிகளையும் ஈழத்தின் வடபகுதியையும் சார்ந்த பகுதியில் இருந்த ஆதிசேடன், விஸ்வகர்மா, மயன், பிரபஞ்சனா, சித்திரவாகனன், பப்பரவான் முதல் நாகர்கள் ஆண்ட இராசதானியும் இருந்ததாகக் கருதுகின்றார்கள். இந்த நாகர்களின் சாம்ராச்சியம், முதலாம் கடல் அழிவுக்குப் பின்னர் கபாடபுரத்தை தலைநகராகக் கொண்டும், அதன் பின்னர் வந்த கடல் அழிவால் தென்னிந்தியர்கள் இன்றைய மதுரையைத் தலைநகராகக் கொண்டும், ஈழத்தவர்கள் மணிபுரத்தைத் தலைநகராகக் கொண்டும் ஆண்டு வந்தார்கள் .

மணிபுரம் என்பது மணிமலையின் ஒரு பகுதியாக இன்றைய கீரிமலையை நாம் கருதுவதாலும், அங்கு புண்ணிய தீர்த்தம் இருப்பதாலும் கீரிமலை என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். மணிமலையின் பாதிப்புக்கு உள்ளாகாத பகுதி கீரிமலை என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது. பொதுவாக மணிமலை தென்னிந்தியாவில் இருந்து ஈழம் வரை நீண்டு இருந்த கடல் கொண்ட குமரிக்கண்டத்தின் ஒரு பெரிய மலையாகவே கருதப்படுகின்றது. இந்தப் பகுதியில் நாகர்கள் வாழ்ந்ததாலும், நாகமாணிக்கம் பற்றிய பல்வேறு கதைகள் வருவதாலும், பிற்காலத்தில் முத்துமணிகள் அதிகளவில் கிடைத்த பிரதேசங்களாக இருப்பதாலும் மணிபுரம் என்ற பெயர் வந்திருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது .

மகாபாரதத்தில், தான் செய்த தவறுக்குத் தண்டனையாக மாறுவேடம் பூண்டு ஒரு வருடம் புண்ணிய தலங்களை தரிசித்துப் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி வரவேண்டும் என்று தண்டனை வழங்கப்பட்ட அர்ச்சுனன் (இங்கு நான் பார்த்தன் என்று குறிப்பிட்டு உள்ளேன், குந்திக்கு உண்மையான பெயர் பிருதை. பிருதை புத்திரன் என்பதால் பார்த்தன் என்று அர்சுனனுக்கு ஒரு பெயர் இருக்கிறது) மணிபுரத்துக்கு வந்து அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் நீராடிக் குமரித் தெய்வத்தை வழிபட்டதாக வரலாற்றில் வருகின்றது. இந்தப் பிருதையின் தாய்வழி வம்சத்தினர் பிரபஞ்சனா என்ற நாக வம்சத்தை சேர்ந்தவர் என்றும் ஒரு குறிப்பு இருக்கிறது .



நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
மகோற்சவ சிறப்பிதழ்

அர்ச்சுனன் வந்து வணங்கிய தெய்வம், கடல் கொண்ட தென்குமரித் தாய்த் தெய்வம் என்று சில வரலாற்று ஆய்வாளர்கள் ஆய்வு செய்து குறிப்பிடப்பட்டு உள்ளதால், பலர் இதை கன்னியாகுமரியோடு இணைத்துப் பாண்டியர்கள் வரலாற்றுடன் இணைக்கின்றார்கள் .

மகாபாரத காலத்தில் நாகவம்சம், குருவம்சம் (சந்திர வம்சம்), யது வம்சம் என வம்சங்கள் கதைகளில் வருகின்றதே தவிர சேர-சோழ-பல்லவ-பாண்டியர் என எங்கும் கதைகளில் வரவில்லை. இவர்களும் அவர்கள் குறிப்பிட்ட வம்சங்களில் இருந்தவர்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை .

அர்ச்சுனன் வந்த மணிபுரம் என்ற இடம் கன்னியாகுமரியா? அல்லது கீரிமலையா? அல்லது இன்றைய நயினாதீவு சார்ந்த தீவுகள் பிரியும் முன்பு இருந்த பகுதியா? என்ற சந்தேகம் எழுகின்றது. இதைவிட, இமயம் சார்ந்து சகல வரலாறுகளையும் மாற்றிய வட இந்தியரால், இமயம் சார்ந்த மணிப்பூர் என்று ஒரு இடத்தை எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல் கதைகளில் எழுதி இருக்கின்றார்கள். அது பல ஆய்வாளர்களால் முழுமையாக மறுக்கப்பட்ட விடயம் .


பாரதக் கதை பற்றி, பல்வேறு வகையில் விளக்க உரை எழுதியவர்களும் அர்ச்சுனன் புண்ணிய தீர்த்தத்தில் நீராடிக் குமரித் தெய்வத்தை வணங்கினான் என்று குறிப்பிட்டு உள்ளார்கள். அதைவிடக் காளி தேவியிடம் சக்தி அஸ்திரத்தையும் பெற்றுக் கொண்டான் என்றும் வரலாற்றில் வருகின்றது. குமரி தெய்வம் என்னும் பொழுது, குமரித் தெய்வம் இன்றும் இருக்கும் அம்பிகை ஆலயங்கள் இருக்கும் இடங்களில் கன்னியாகுமரி சார்ந்த பகுதியும், நயினாதீவும் சிறப்புப் பெறுகின்றன. கீரிமலையில் இருப்பது சிவன். உடன் சேர்ந்து நகுலேஸ்வரி. அடுத்து கன்னியாகுமரியில் நீராடிப் பின்னர் சேது தீர்த்தத்தில் நீராடி (அதாவது சமுத்திர தீர்த்தம்) தெற்கு நோக்கிப் பஞ்ச தீர்த்தங்களில் நீராடச் சென்றான் என்று வரலாறு வருகின்றது. அப்படியாயின் கன்னியாகுமரிக்குத் தெற்கில் இருக்கும் மணிபுரம் இன்றைய நயினாதீவு சார்ந்த பகுதி எனக் கருதப்படுகின்றது. ஈழத்து வரலாற்று ஆசிரியர்களுக்கு உள்ள குழப்பம் என்னவென்றால், அவர்கள், இந்த வரலாறுகள் தீவுகள் பிரிந்த பின்னர் நிகழ்ந்ததாகக் கருதி யாழ் குடாநாடு சார்ந்து வரலாற்றை நிறுவுகின்றார்கள். எனவே இவர்களின் குழப்பங்களைத் தீர்க்கும் வகையிலும் உண்மையான ஒரு வரலாற்றை நிறுவும் வகையிலும் நான் வைக்கும் உறுதியான ஆதாரம் தான் பப்பரவன்சல்லி. இந்தப் பப்பரவன்சல்லி என்ற இடத்தின் பெயர் வந்த விளக்கத்தை அந்த இடத்தைப் பாரத வரலாற்றுச் சம்பவ இதிகாச கதையை உள்வாங்கி நிறுவுகின்றேன்.

மணி புரத்துக்குப் பிராமண வேடம் தாங்கி வந்த பார்த்தன், அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் நீராடிக் குமரி த் தெய்வத்தை வணங்குகின்றான். இவ்வாறு வணங்கிவருந் நாளில் உலுப்பி என்ற நாக கன்னிகை இவன் மீது ஆசை கொள்கின்றாள். அர்ச்சுனன், அவள் ஆசைக்கு உடன்படாது மறுக்கின்றான். உலுப்பியிடம் தீராத பல நோய்களையும் தீர்க்கும் ஞானஒளி பொருந்திய நாகரத்தினம் இருந்தது. இது ஆதிசக்தியால் நாகர்களுக்கு வழங்கப்பட்டது என்று வரலாறுகள் உண்டு. அந்த நாகரத்தினத்தை சாதாரண கண் கொண்டு பார்த்தால் அவர்கள் மயக்கம் அடைவார்கள். மயக்கத்தில் இருப்பவர்கள் அந்த ஒளியால் தெளிவடைவார்கள். உலுப்பியும் அந்தச் சக்தி வாய்ந்த நாகரத்தினத்தைக் கொண்டு பார்த்தனை மயக்கித் தனது இடத்துக்குக் கொண்டு சென்று தனது இச்சைக்கு இணைய வைத்து, அரவன் என்ற மகனைப் பெற்றெடுக்கின்றாள். இந்த அரவன்தான், வளர்ந்து பிற்காலத்தில் குரு க்ஷேத்திரப் போரில் வெற்றி வேண்டிக் காளிதேவிக்கு, தர்மன் செய்த யாகத்தில் தற்கொடையாகித் தன் உயிரைத் துறக்கின்றான் .

ஒருமுறை, தீர்த்தத்தில் நீராடிப் பார்த்தன் தியானத்தில் ஆழ்ந்திருந்த வேளையில், நாககன்னிகையின் அவலக் குரல் கேட்டு விழிக்கின்றான். அந்த இடத்தில் யானை ஒன்று நாககன்னிகையைத் தாக்க முற்படுகின்றது. உடனே தனது வில்லை எடுத்து அம்பு தொடுத்து யானையைக் கொன்று நாககன்னிகையைக் காப்பாற்றுகின்றான். சகல போர்ப் பயிற்சிகளும் பெற்ற அந்த நாககன்னிகைக்குத் "தன்னைத் தன்னாலேயே யானையிடம் இருந்து காப்பாற்ற முடியவில்லை, இவனால் எவ்வாறு சாத்தியமானது? இவன் பரசுராமன் வழிவந்த வீரப்பிராமணனா? இல்லை சத்திரியனா? இல்லை, இவன் சத்திரியனாகத்தான் இருக்கவேண்டும். பிராமண வேடத்தில் இருக்கின்றான்" என்று ஊகித்து உணர்ந்து அவனுடன் உரையாடி உண்மையை உணர்ந்தாள் ("பிராமணன்" என்பது அக்காலத்தில் கல்வி-கேள்வி-தவத்தினால் பிரம்மத்தை அறிந்தவர்களைக் குறித்தது).

யானையிடம் இருந்து காப்பாற்றப்பட்ட சித்திராங்கதை, பிராமண வேடத்தில் இருந்த பார்த்தன் அருகிற் சென்று நன்றி கூறி, "வில்வித்தையில் சிறந்த பிராமணரே! நான் இந்த நாட்டின் அரசன் சித்திரவாகனன் மகள். எனது பெயர் அல்லி. எனது தந்தைக்கு நான் ஒரே பிள்ளை என்பதால் என்னை இந்த நாட்டுக்கு இளவரசியாக அறிவித்து எனக்கு சித்திராங்கதை என்று பெயர் சூட்டி இருக்கின்றார். உங்களைப் பார்த்தால் எனக்கு பிராமணராக தெரியவில்லை. நீங்கள் யார்? உண்மையைச் சொல்லுங்கள்" என்று கேட்டாள்.

முதற் பார்வையிலேயே அவளது அழகில் மயங்கித் தன்னிலை மறந்துநின்ற பார்த்தனால், அவளிடம் பொய் சொல்ல முடியவில்லை. காலக்கணிப்பில் தான் மாறுவேடத்தில் இருக்கவேண்டிய காலமும் அத்துடன் நிறைவானதால், தன்னை அர்ச்சுனன் என்று வெளிப்படுத்தினான். மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்த அவள் அவனைத் தனது அரண்மனைக்கு அழைத்துச் சென்று தந்தைக்கு அறிமுகபடுத்தினாள்.





தன் அரண்மனைக்கு வந்திருப்பவன் அஸ்தினாபுரத்துக் குருவம்ச அரசவாரிசும், இந்திரபிரஸ்தத்தை பேரரசாக்கியவனும், தன் மூதாதையான நாக அரசன் பிரபஞ்சனா வழியில் வந்த சகோதரியான பிருதையின் மகன் பார்த்தன் என்பதையும் அறிந்த சித்திரவாகனன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். தங்களுக்குள் உள்ள உறவு முறை பற்றிய விளக்கங்களைப் பார்த்தனுக்குக் கூறினான் .

பார்த்தனும், சிறுவயதில் துரியோதனனால் நச்சுப் பாயாசம் கொடுத்துக் கடலில் விட்ட வீமனை நாகர்கள் கடலில் காப்பாற்றிய பொழுது, எங்கள் தாய், தான் நாகலோகத்தைப் பூர்வீகமாகக் கொண்டவள் என்றும், குந்துபோஜனின் வளர்ப்பு மகள் என்றும், தங்களுக்கு உண்மையைக் கூறியதாகவும் கூறினான். சித்திராங்கதையைக் கண்டதுங் காதல்கொண்டு மனத்தால் அவளை அடைந்துவிட்டேன், அவளை எனது மனைவியாக்க விரும்புகின்றேன் என்று சித்திரவாகனனிடம் தனது விருப்பத்தையும் கூறினான் .

சித்திரவாகனுக்குச் சம்மதமானாலும், எங்கள் நாகர்குல வழக்கப்படி, நாங்கள் தாய்வழி உறவு முறையை பின்பற்றுபவர்கள். அந்த வகையில், பார்த்தா! நீயும் தாய்வழி உறவில் வருகின்றாய். அதனால் திருமணத்திற்குச் சம்மதிப்பதில் தயக்கம் இல்லை. ஆனால்,, எங்கள் வழக்கப்படி எனது மகளைக் கன்னிகாதானம் செய்து உங்களோடு இந்திரப்பிரஸ்ததுக்கு அனுப்ப முடியாது. அவள் இங்கேயே இருக்கவேண்டும். இந்த நாகர்குல அரசை, அவளும் அவளுக்குப் பிறக்கும் பிள்ளையும் ஆளவேண்டும் அதற்கு சம்மதமானால் நான் உங்கள் திருமணத்துக்கு சம்மதிக்கின்றேன் என்று கூறினான். அர்ச்சுனன் சம்மதித்ததால் அல்லிக்கும் அவனுக்கும் சித்திரவாகனன் இனிதே திருமணத்தை நிறைவேற்றி வைத்தார். இவர்கள் இருவரும் சில வருடங்கள் இல்வாழ்வில் இன்புற்று இருந்தார்கள். இவர்களுக்குப் பிறந்த பிள்ளைதான் பப்பரவாகனன். இவன் பிறந்து சிறிது காலத்தில் தர்மனிடம் இருந்து அழைப்பு வர, அர்ச்சுனன் மணிபுரத்தில் இருந்து கோகர்ணம் சென்று அங்கிருந்து துவாரகை சென்று அங்கு கிருஷ்ணர் தங்கை சுபத்திரையை அவள் விருப்பத்தின் பெயரில் கடத்திக் கொண்டு இந்திரப்பிரஸ்தம் செல்கின்றான் .

அர்ச்சுனன் சென்ற பிரிவுத் துயர் தாங்க முடியாமல் சித்திராங்கதை இன்று நயினாதீவு மக்களால் முனைசல்லி என்று அழைக்கப்படும் இடத்தில், அதாவது இன்று அம்பாள் கோவில் நாக சாந்தி செய்யும் மண்டபம் உள்ள இடத்துக்கு அண்மையாகக் கருதப்படுகின்றது, அந்த இடத்தில் இருந்த தாய்த் தெய்வத்தின் ஆலயத்தின் முன் தன் மகனான பப்பரவனையும் வைத்துக்கொண்டு அழுது கண்ணீர் விட்டுப் பிரிவால் தவித்தாள். இதனை நாவலர் தனது கவிதையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் .

கற்பகத்து இறையை வென்ற
கைதவன் கடற்று என் கன்னித்
தற்பரை கோயில்முன் உன்
தவம், தவம் கிடக்க, அன்னான்
அற்பு, அறம் குழைந்து ஆங்கு ஓர்
சேய்
அமிழ்து எழ தமிழில் அன்னை
கற்பு அறம் மிழற்றக் கண்டேன்
காண நீ நோற்றாய் அல்லை......

இதில் நாவலர் குறிப்பிடும் 'கற்பகத்து இறை' என்பது இந்திரன். இந்திரனை வென்ற இந்திரஜித்து வம்சத்தில் வந்தவள் என்ற கருத்தில் அவர் கூறி இருக்கலாம். இந்திரஜித்துவின் மனைவி சுலோட்சணா ஆதிசேடனின் மகள் என்று ஒரு வராலாறு இருக்கிறது. அவள் வம்சத்தில் வந்தவள் இவள் என்ற கருத்தாக இருக்கலாம், இவை இன்னும் ஆய்வுக்கு உரிய விடயம் .

இவ்வாறு சித்திராங்கதை பிரிவுத் துயரால் வாடுவதை அறிந்த அர்ச்சுனனின் இன்னொரு மனைவியான உலுப்பி, பார்த்தனிடம் வாலிபனாய் இருந்த தன் மகன் அரவனைத் தூது அனுப்புகின்றாள். அரவன் சென்று தந்தையை இந்திரன் சபையில் சந்தித்துத் தாயும் சிறியதாயும் தங்களைக் காணாது படுந் துன்பங்களைக் கூறுகின்றான். ஆனால் அர்சுனனால் அந்தச் சமயம் இவர்களைப் பார்க்க வரமுடியவில்லை.

சில காலத்தின் பின்னர் பாரதப் போரின் தொடக்கத்தில் அரவானும் இறந்துபோக, சித்திராங்கதை மகன் பப்பரவன் குருவம்சத்தினர் மீதும் தந்தை மீதும் யது வம்சத்தினர் மீதும் கோபம் கொண்டவனாய் வளர்ந்து நாக நாட்டை ஆள்கின்றான். அண்ணனான. அரவனைச் சதி செய்து கொன்றதாகவும் தாய்மாரைத் தவிக்க விட்டதாகவும் கருதி குருவம்சதினரையும் அதற்கு உடந்தையாகச் சூழ்ச்சிகள் செய்த யது வம்சத்தினரையும் பழிவாங்க நினைக்கின்றான். அதற்காகக் காலம் பார்த்து இருக்கின்றான் .

பாரதப் போரில் வெற்றி பெற்ற பின்னர் கிருஷ்ணரும் அர்சுனனும் சேர்ந்து நாகர்கள் வாழ்ந்த காண்டவ வனத்தை அழிகின்றார்கள். அதில் பெருந்தொகை நாகர்கள் இறக்க, தப்பிப் பிழைத்தோர் இடம்பெயர்ந்து செல்கின்றார்கள். இவ்வாறு நாகர்களுக்கும் குருவம்சத்தினருக்கும் யதுவம்சத்தினருக்கும் பகை உருவானது. அந்தக் காலத்தில் தர்மர் செய்த அசுவமேத யாகக் குதிரையைப் பப்பரவன் சிறைப்பிடித்து நாக நாட்டுக்குக் கொண்டு வருகின்றான். அதைத் தேடிவரும் குருவம்சத்தினரைப் போரில் வென்று சிறைப்படுத்துகின்றான். இறுதியில் அர்ச்சுனன் யாகக் குதிரையை தேடி வந்து பப்பரவனுடன் போர் புரிகின்றான் வந்து இருப்பது தந்தை என்று அறியாமலே பப்பரவன் வீரமாகப் போர் புரிந்து அர்ச்சுனனைப் போரில் தன் நாகக்கணையால் தாக்கி மூர்சை அடையச் செய்கின்றான். படுகாயங்களுக்கு உள்ளாகி அர்ச்சுனன் மரணிக்கும் ஆபத்தில் இருந்த வேளை உலுப்பி அவ்விடத்துக்கு வந்து ஒளி பொருந்திய நாகரத்தினத்தின் துணையுடன் வைத்தியம் செய்து நாகபாணத்தினால் கட்டப்பட்ட அர்ச்சுனனைக் காப்பாற்றி வந்து, 'இருப்பது உன்




தந்தை' என்று கூறி பப்பரவனுக்கு உண்மையைப் புரியவைக்கின்றாள் .

பின்னர் சித்திராங்கதையிடம் அழைத்துச் சென்று அனைவரும் ஒன்று சேர்ந்து யாகக் குதிரையுடன் அஸ்தினாபுரத்துக்குச் செல்கின்றார்கள். அங்கு யாகத்தின் பின்னர், 'யாகத்தில் கலந்து கொள்ள மட்டுமே பப்பரவன் வந்தான், அரசில் பங்கு கேட்க அல்ல' என்பதைப் புரிந்துகொள்ளாத அபிமன்யு மகன் பரீட்சித்தோடு ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் தாயையும் பெரியதாயான உலுப்பியையும் அழைத்துக்கொண்டு பப்பரவன் மீண்டும் நாக நாட்டுக்கு வந்து சிறப்பாக அரசாட்சி செய்து வந்தான். பிற்காலத்தில் பரீட்சித்தும், பப்பரவன் வழி வந்த நாகஅரசனாலேயே கொல்லபட்டான். அதற்குப் பின், பரீட்சித்து மகன் ஜெனமேஜெயன் நாகர்களைப் பழிவாங்க நாகர்கள் உலகின் பல்வேறு பகுதியிலும் பரந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. நாகர்களுடனான போரினாலும் சம காலத்தில் ஏற்பட்ட கடல் அழிவினாலும் குருவம்சமும் யதுவம்சமும் பெரும் அழிவுகளைச் சந்தித்தது. இதுவே துவாபரயுகத்தின் முடிவாகவும் கொள்ளப்படுகின்றது. பொ.ஆ.மு 3114 இந்தக் காலம் தான் நாகர்கள் இடம் பெயர்ந்த துவாபரயுகத்தின் முடிவாகக் கருதப்படுகின்றது. அதன் 12 வருடங்களின் பின்னர் கலியுகத்தின் ஆரம்பமாக பொ.ஆ.மு 3102 குறிப்பிடுகின்றார்கள் .

இவ்வாறு மகாபாரதக் கதைகளிலும், அதன் பின்னர் எழுதப்பட்ட கிளைக் கதைகளிலும் வரலாறுகள் நீண்டு செல்கின்றது. வரலாறுகள் எழுதப்பட்ட வகையில் பல்வேறு மாற்றங்களுக்கும் தாக்கங்களுக்கும் உள்ளாகி இருந்தாலும், அந்த வரலாற்றின் ஒரு சிறு பகுதி நடந்த இடம் இன்றைய நயினாதீவு என்பதற்கு சான்றாக இங்கு இன்றும் வரலாற்று ஆசிரியர்களாலும் நயினை மக்களாலும் அழைக்கப்படும் பப்பரவன்சல்லி என்ற இடம் அம்பாள் ஆலயம் அமைந்துள்ள பெரும் பகுதியும், அதனுடன் சேர்ந்த கல்யாண மண்டபம் சார்ந்த பகுதியும், வள்ளுவர் மடம் அமைந்துள்ள பகுதியும், வடக்குக் கரை ஐயனார் ஆலயப் பகுதியும் அதனோடு இணைந்த பகுதியும் பப்பரவன்சல்லி என்று அழைக்கப்படுகின்றது. அம்பாள் ஆலயப் பல்வேறு குறிப்புக்களிலும் ஆலய வரலாறு கூறும் நூல்களிலும் உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் இருக்கின்றது. அதற்கு மேற்குப் புறமாகக் கடலோடு சேர்ந்த நாக சாந்தி செய்யப்படும் மடம் அமைந்துள்ள கடல்சார் பகுதி 'முனைசல்லி' அல்லது 'பப்பரவன்முனைசல்லி' என்று அழைக்கப்படுகின்றது .

சில வரலாற்றுக் குறிப்புக்களில் வரும் விடயங்களில் இருந்து, பப்பரவன் என்ற அரசன் இராசதானியாக இருந்து ஆட்சி செலுத்திய இடமாக இன்றைய வங்களாவடி ஞானவைரவர் ஆலயம் அமைந்துள்ள பகுதி சார்ந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. அது எதிர்காலத்தில் ஆய்வாளர்களால் சரியாக ஆய்வு செய்து நிறுவப்படுமாயின் ஏற்புடையதே..! அல்லது பப்பரவனுடைய இராசதானி அங்கிருந்து இன்றைய பப்பரவன்சல்லிவரை நீண்டு இருந்து இருக்கலாம். இன்று நாம் பப்பரவன்சல்லி என்று அழைக்கப்படும் இடம் பப்பரவன் தாய் அல்லி வாழ்ந்த இடம் என்பதைக் கொண்டு முன்னர் பப்பரவன் அல்லி என்று கூறப்பட்டு பிற்காலத்தில் பெயர் மருவி பப்பரவன் சல்லியாகி இருக்கலாம் .


மேலும் இன்று நயினாதீவில் இருக்கும் மயானம், 'சல்லிபரவை' என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. இதுவும் பப்பரவன் தாய் அல்லியின் பெயரைக் கொண்டு ஒருகாலத்தில் 'அல்லிபரவை' என்று அழைக்கப்பட்டுப் பிற்காலத்தில் பெயர் மாறி இருக்கலாம். எழுதப்படாத வரலாறுகள், செவிவழிக் கதைகள் பேச்சு வழக்கில் பெயர்கள் மாறி வருவது உலக இயற்கை. அந்த வகையில் பெயர்மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கலாம். இவை இன்னும் ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டிய விடயங்களாக இருந்தாலும் நான் எனது சக்திக்கு உட்பட்டவகையில் இந்த கட்டுரையில் எனது கருத்தை முன் வைத்து நிறைவான வரலாற்றை எதிர்காலத்தின் கைகளில் விட்டுச் செல்கின்றேன் ..!

## சிந்தனைக்கு

அமைதி, மகிழ்ச்சி, ஆறுதல், சுகம் என்பவைகள் மனதிலிருந்து உண்டாகின்றன. மனதைச் செம்மையாக வைத்துக் கொண்டவன் இன்பத்தை அடைவான். செல்வம், பெரிய மாளிகை, நிலம் முதலியவை எத்தகையிருந்தாலும் மனதைச் செம்மையாக வைத்துக் கொள்ளாதவன் துன்பத்தை அடைவான். எனவே இன்பமும் துன்பமும் மனதிலிருந்து உண்டாகின்றன.

ஒரு சிலருடைய வயல் நன்றாக விளைகிறது. ஒரு சிலருடைய வயலில் பயிர் சாவியாகி விடுகிறது. இதற்கு என்ன காரணம்? முற்பிறப்பிலும் இப்பிறப்பிலும் விருந்தோம்புவான் விளை நிலம் நல்ல பயனைத் தருகிறது. விருந்தினரைக் கடிந்து பேசித் துரத்தினோனது வயலில் விருந்தினர் முகம் வாடியது போல் பயிரும் வாடி பயனைத் தருவதில்லை. பண்ணிய பயிரில் புண்ணிம் தெரியும்.

சென்ற வருடத்தில் விளைவித்த தானியத்தையல்லவா இப்போது உண்ணுகிறோம். அதுபோல் முன் ஜென்மத்தில் செய்த நன்மையினால் நாம் இப்போது சுகத்தை அனுபவிக்கின்றோம். இப்போதும் நன்றாகப் பயிரிட்டு விளைவித்தால்லவா அடுத்த வருடத்தில் கவலையற்றிருக்கலாம். இப்போது நாம் நன்மையைச் செய்தாலல்லவா மறு பிறவியில் சுகம் பெறலாம்.





# இலங்கைத் தமிழரின்
## பண்டைய இருப்பை வெளிப்படுத்தும்
# "சரசோதி மாலை"

**த.மனோகரன்**
**கல்விக்குழுச் செயலாளர், அகில இலங்கை இந்துமாமன்றம்**

ஒரு இனத்தின், மொழியின், மதத்தின் இருப்பை வரலாற்றுரீதியாக அறிந்து கொள்வதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் பலவழிமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன. தொல்பொருள் ஆய்வுகள், கல்வெட்டு ஆதாரங்கள் என்று பல காணப்படுகின்றன. அவற்றுடன் பண்டைய இலக்கியங்களும், வழிபாட்டுத்தலங்களும் அடங்குகின்றன.

அந்த வகையிலே இலங்கையின் வடமேற்கு மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் ஏழு நூற்றாண்டுகளுக்குமுன் இந்துத் தமிழரின் இருப்பையும், பெருமையையும் அத்துடன் தமிழ் மொழி பெற்றிருந்த உரிமையையும் ஒருங்கே வெளிப்படுத்தும் சான்றாதாரமாக "சரசோதி மாலை" என்ற நூல் அமைந்துள்ளது.

தம்பதெனியாவைத் தலைநகராகக் கொண்டு இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் கி.பி 1236 முதல் கி.பி 1271 வரை முப்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளான். அதேபோல் கி.பி 1291 முதல் 1317 வரையிலான இருபத்தாறு ஆண்டுகள் குருணாகலையைத் தலைநகராகக் கொண்டு நான்காம் பராக்கிரமபாகு ஆட்சி செய்துள்ளான்.

இவர்கள் தம்பதெனியவைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த இரண்டாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் அவனது அரச சபையில் தேனுவரைப் பெருமாள் என்ற பெயர் கொண்ட போசராசபண்டிதரால் "சரசோதி மாலை" என்ற தமிழ் மொழியிலான, வெண்பா வடிவிலான சோதிடநூல் இயற்றப்பட்டு, அரச சபையில் அரங்கேற்றப்பட்டுள்ளது. அதாவது வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் மொழியிலான இந்நூல் குறித்த அரசனின் ஆட்சிக் காலத்தின் ஏழாவது ஆண்டில் அதாவது கி.பி 1278 இல் அரச சபையில் அரசன் முன்னிலையில் வெளியிடப்பட்டது என்பது வரலாற்றுப் பதிவாகும். குறித்த சரசோதி மாலை என்ற நூல் தம்பதெனிய அரசன் இரண்டாம் பராக்கிரமவின் வேண்டுகோளுக் கிணங்க இயற்றப்பட்டு அரச சபையில் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்புகளிலுள்ளது.

இந்நூல் பன்னிரெண்டு(12) படலங்களைக் கொண்டுள்ளது. சோடச கருமப் படலம் முதலாவது படலமாக அமைகின்றது. தொடர்ந்து ஏர்மங்கலப் படலம், அரசியற் படலம், யாத்திரைப் படலம், மனை செயற் படலம், தெய்வவிரதப் படலம், குணா குணப் படலம், சுபா சுபாப் படலம், நாழிகைப் படலம், சாதகப் படலம், நட்சத்திர திசைப்படலம் என்று அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.


இந்நூல் முழுமையான சோதிடநூலாகும். மனித வாழ்வுக்குத் தேவையான சோதிடவழி காட்டியாகவும் இதனைக் கொள்ளலாம். விவசாயத் தொழிலில் ஈடுபடுவோருக்கான வழிகாட்டலாக ஏர்மங்கலப் படலம் உள்ளது போல் அரசாட்சி செய்பவர்களுக்கான வழிகாட்டியாக அரசியற் படலம் உள்ளது. இவ்வாறு மனித வாழ்வின் முக்கிய வழிகாட்டல்களை உள்ளடக்கிய பெறுமதி வாய்ந்த தமிழ் மொழியிலான இந்த "சரசோதி மாலை" யானது நூலில் அடங்கியுள்ள பெறுமானங்களுக்கும் அப்பால் குறித்த பிரதேசத்தில் அந்நாட்களில் இந்துக்களின், தமிழர்களின் பண்டைய இருப்பையும், வளத்தையும், சிறப்பையும், பெருமையும் வெளிப்படுத்துவதுடன் இந்துசமயம் மற்றும் அதன் கோட்பாடுகள், நம்பிக்கை ஆகியவற்றின் மீது அரசனும், மக்களும் கொண்டிருந்த ஆர்வத்தையும் தெளிவாக வெளிப்படுத்துகின்றது. அத்துடன் அரச சபையிலே தமிழ் மொழி பெற்றிருந்த மாட்சியையும் வெளிப்படுத்துகின்றது.

தம்பதெனியவில் ஆட்சிசெய்த சிங்கள அரசனென்று வரலாற்றாசிரியர்களால் கூறப்படும் இம்மன்னன் எதனால் குறித்த சோதிடநூலைத் தமிழில் இயற்றுமாறு வேண்டுகோள் விடுத்தான் என்பது சிந்தனைக்குரியது, ஆய்வுக்குரியது.

அக்காலத்தில் அப்பிரதேசத்தில் தமிழ் மக்கள் வளத்துடன் வாழ்ந்தார்கள், தமிழ் மொழிமக்களின் பயன்பாட்டுக்குரிய அறிவுமொழியாக இருந்துள்ளது. தமிழர் பண்பாடு, கலாசாரம், இந்துசமயம் என்பன சிறப்புடன் விளங்கின. அத்துடன் நாடாண்ட அரசனும், அரச சபையிலிருந்த மந்திரி பிரதானிகளும் தமிழ்ப்புலமை கொண்டவர்களாக இருந்தனர் என்பதற்குச் சரசோதி மாலையின் தோற்றமும், அரங்கேற்றமும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத தக்க சான்றுகளாகும்.

இந்நூல் தூய தமிழில் பொருட் செறிவுடைய செய்யுட்களால் இயற்றப்பட்டுள்ளது. சிங்கள மொழியில் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டு அன்றாட பயன்பாட்டுக்கான வழிமுறைகளைக் கைக் கொள்ளக்கூடிய வழிகாட்டியாகக் கொள்ளப்படும் அதேவேளை தமிழ் மொழியில் ஆக்கப்பட்ட சரசோதி மாலை தமிழர்களால் கண்டு கொள்ளப்படாத வொன்றாகவேயுள்ளது. இது கவலை தரும் நிலையாகும்.

சரசோதி மாலையென்றொரு நூல் தம்பதெனிய ஆட்சிக் காலத்தில் ஆக்கப்பட்டது என்ற குறிப்பை மட்டுமே தமிழர்கள்






அறிந்துள்ளனரேயன்றி அதன் வரலாற்றை, பெறுமதியை அறியும் ஆர்வம் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். தமிழறிஞர் நிலையும் அதுவாகவேயுள்ளது.

அனைவருக்கும் தேவையான சோதிட விடயங்கள்யாவும் பொதிந்துள்ள இந்நூல் இலங்கையின் வடமேற்குப் பிரதேசத்தில் எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களின், இந்துக்களின் இருப்பைக் கட்டியம் கூறும் வரலாற்று ஆதாரமாகவும் விளங்குகின்றது. விருத்தங்களாலான கவிதை நூலாக பொருள் பொதிந்ததாக, ஓசை நயத்துடன் கூடிய சொற் செறிவுடையதாக இருப்பது இதன் சிறப்பை மேம்படுத்துகின்றது.

விநாயக வணக்கம், திருமால் வணக்கம் என்பவற்றுடன் இயற்றப்பட்டுள்ள இந்நூல் தமிழ் மொழியை அலங்கரிக்கும் சுடர்வீசும் மாலையாகவும் விளங்குகின்றதென்றால் மிகையல்ல. இலங்கைத் தமிழரின் வரலாற்றின் முக்கிய சான்றாக, இருப்பின் வெளிப்பாடாக சரசோதி மாலை உள்ளமையை உணர்ந்து குறித்த பெறுமதி மிக்க நூலைப் பாதுகாக்கவும், ஆய்வு செய்யவும் வேண்டிய பொறுப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உட்பட தமிழ் மொழித்துறையைக் கொண்டுள்ள பல்கலைக்கழகங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். இது தமிழ் மொழிக்குச் சிறப்பு சேர்ப்பதாகவும், தமிழர் வரலாற்றை உறுதிப்படுத்துவதாகவும் அமையும்.

மறைந்து, புதைந்து கிடக்கும் தமிழருக்குரிய பெறுமதி மிக்க பொக்கிஷமான சரசோதி மாலையை இனியும் தூரவிலக்கிவைக்காது உலகத்தமிழரின் ஆய்வுக்குரிய நூலாக ஆக்கும் தேவை நம்மவரால் உணரப்படவேண்டும்.



# நல்லூர்க் கந்தசுவாமி கோவில் விகாரி வருடத்துப் பெருந்திருவிழா 2019

(ஆவணித்திங்கள் 20ம் நாள் - புரட்டாதித்திங்கள் 15ம் நாள், 2019)

| திகதி | த. தி | கிழமை | விஷேட தினங்கள் | நேரம் | திருவிழா |
|---|---|---|---|---|---|
| 05.08.2019 | 20 | திங்கள் | கொடிச்சீலை எடுத்துவரல் | பகல் 9-45 | |
| 05.08.2019 | 20 | திங்கள் | வைரவர் உற்சவம் | மாலை 5-30 | |
| 06.08.2019 | 21 | செவ்வாய் | கொடியேற்றம் | பகல் 10-00 | 01ம் திருவிழா |
| 15.08.2019 | 30 | வியாழன் | மஞ்சம் | மாலை 5-00 | 10ம் திருவிழா |
| 22.08.2019 | 5 | வியாழன் | அருணகிரிநாதர் உற்சவம் | மாலை 6-00 | 17ம் திருவிழா |
| 23.08.2019 | 6 | வெள்ளி | கார்த்திகை உற்சவம் | மாலை 5-00 | 18ம் திருவிழா |
| 24.08.2019 | 7 | சனி | சூர்யோற்சவம் | காலை 7-00 | 19ம் திருவிழா |
| 25.08.2019 | 8 | ஞாயிறு | சந்தானகோபாலர் உற்சவம் | காலை 7-00 | 20ம் திருவிழா |
| 25.08.2019 | 8 | ஞாயிறு | கைலாசவாகனம் | மாலை 5-00 | 20ம் திருவிழா |
| 26.08.2019 | 9 | திங்கள் | கஜவல்லிமஹாவல்லி உற்சவம் | காலை 7-00 | 21ம் திருவிழா |
| 26.08.2019 | 9 | திங்கள் | வேல்விமானம் | மாலை 5-00 | 21ம் திருவிழா |
| 27.08.2019 | 10 | செவ்வாய் | தெண்டாயுதபாணி உற்சவம் | காலை 7-00 | 22ம் திருவிழா |
| 27.08.2019 | 10 | செவ்வாய் | ஒருமுகத் திருவிழா | காலை 7-00 | 22ம் திருவிழா |
| 28.08.2019 | 11 | புதன் | சப்பரம் | மாலை 5-00 | 23ம் திருவிழா |
| 29.08.2019 | 12 | வியாழன் | தேர் | காலை 7-00 | 24ம் திருவிழா |
| 30.08.2019 | 13 | வெள்ளி | தீர்த்தம் | காலை 7-00 | 25ம் திருவிழா |
| 30.08.2019 | 13 | வெள்ளி | கொடியிறக்கம் | மாலை 5-00 | 25ம் திருவிழா |
| 31.08.2019 | 14 | சனி | பூங்காவனம் | மாலை 5-30 | 26ம் திருவிழா |
| 01.09.2019 | 15 | ஞாயிறு | வைரவர் உற்சவம் | மாலை 5-30 | 27ம் திருவிழா |




# சங்கரன்கோயில் ஆடித் தபசு

ஒரு ஆண்டானது, ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையிலான காலப்பகுதி தட்சிணாயனம் எனவும், தை மாதம் முதல் ஆனி மாதம் வரையான காலப்பகுதி உத்தராயணம் எனவும் வகுக்கப்படுகின்றது. தட்சிணாயனம் என்பது மாரி காலத்தின் ஆரம்பத்தையும் உத்தராயணம் என்பது கோடை காலத்தின் துவக்கத்தையும் காட்டுகின்றன.


ஆடி மாதம் என்பது பண்டிகைகளின் ஆரம்பம்! பூமாதேவி அவதரித்த ஆனந்த மாதம் - அம்மனுக்கே உரித்தானது.

ஆடிப்பூரம் ஆண்டாளின் அவதாரத் திருநாள்! பூமாதேவியே ஆண்டாளாக அவதரித்தாள் என்கிறது புராணம்.

ஆடி மாதத்தில் அம்மன் கோவில்களில் விசேடமான பூசைகளும் விழாக்களும் நடைபெறும்.

## ஆடித் தபசு விழா

தபசு என்றால் தவம் எனப் பொருள்படும். அம்பாள், சிவ, விஷ்ணுவை சங்கரநாராயணராக வேண்டித் தவமிருந்து



அவரது காட்சியைப் பெற்ற நாளே ஆடித்தபசுத் திருநாள். இந்த விழா 12 நாட்கள் நடக்கும். அம்பாளுக்கான பிரதான விழா என்பதால், அம்பாள் மட்டுமே தேரில் எழுந்தருளுவாள். கடைசி நாளில் அம்பிகை தபசு மண்டபம் சென்று, கையில் விபூதிப் பையுடன் ஒரு கால் ஊன்றித் தவம் இருப்பாள். மாலையில் சங்கரநாராயணர் அம்பாளுக்குக் காட்சி தருவார். அதன்பின் சங்கரலிங்க சுவாமி, யானை வாகனத்தில் சென்று அம்பாளுடன் இணைந்து கோயிலுக்குட் செல்வார். அப்போது, விவசாயிகள் விளைபொருட்களை அம்பாளுக்குக் காணிக்கையாக அளிப்பர்.

## அன்னையின் தவம்

நாக அரசர்களான சங்கன், சிவன் மீதும், பதுமன், திருமால் மீதும் ஈடற்ற பக்தி கொண்டிருந்தனர். இருவருக்கும், சிவன் பெரியவரா, திருமால் பெரியவரா என்ற வாதம் எழுந்தது. தீர்ப்பு வேண்டிப் பார்வதிதேவியிடம் முறையிட்டனர். இருவரும் சம சக்தி கொண்டவர்களே என்பதை அவர்களுக்கு உணர்த்த, சிவனும் திருமாலும் இணைந்து காட்சி தரும்படி அம்பாள் தவமிருந்தாள். இதையடுத்து, இருவரும் சங்கரநாராயணராகக் காட்சி தந்தனர். பின்னர், சிவன், சங்கரலிங்கமாகவும் எழுந்தருளினார். நாகராஜர்கள் இருவரும் சங்கரலிங்கத்தை வழிபட்டு வந்தனர். காலப்போக்கில் இந்த லிங்கத்தைப் புற்று மூடிவிட்டது. நாகராஜர்கள் அதனுள்ளேயே இருந்தனர்.

## புற்றில் வெளிப்படல்

மணிக்ரீவன் என்ற தேவன் பார்வதி தேவியின் சாபத்தாற் பறையனாகிப் (கவனிக்க: "பறையன்" என்பது சாதியல்ல. அது பெரிபறையை அடித்து அறிவிக்கும் தொழிலின் நிமித்தத்தால் ஏற்பட்ட தொழிற்பெயர்) புன்னைவனக் காவலனாக இருந்தான். அதனால் அவன் காப்பறையன் என்றும், காவற் பறையன் என்றும் பெயர் பெற்றான். கரிவலம்வந்தநல்லூர்ப் பால்வண்ண நாதருக்குப் புன்னைவனத்திலே ஒரு பூந்தோட்டம் இருந்தது. அதற்கும் அவனே காவல். தோட்டத்தின் ஒரு பக்கம் புற்றொன்று வளர்ந்தது. அதை ஒரு நாள் அவன் வெட்ட அதிலிருந்த பாம்பின் வாலும் வெட்டுப்பட்டது. அப்போது அவன் புற்றின் பக்கத்தில் சிவலிங்கம் இருப்பதையும் கண்டான்.

அதே சமயத்தில் உக்கிரபாண்டியர் அடுத்த வனத்தில் வந்திருப்பதாக அறிந்து செய்தி தெரிவிக்க ஓடினான்.

### மன்னன் வருகை

திருநெல்வேலிக்கு மேலே பொருநையாற்றின் கரையிலுள்ள மணலூரில் அரசாண்டிருந்த உக்கிரபாண்டியர் அடிக்கடி மதுரை சென்று மீனாட்சியம்மையையும், சொக்கநாதப்பெருமானையும் வழிபாடு செய்யும் வழக்கமுடையவர். காவற்பறையன் புற்றை வெட்டிச் சிவலிங்கத்தைக் கண்ட அன்று, பாண்டியருடைய யானை கொம்பினால் தரையைக் குத்திக் கீழே விழுந்து புரண்டது. பாண்டியர் ஒன்றும் செய்ய அறியாது திகைத்திருந்த போதுதான் காவற்பறையன் ஓடிவந்து அரசரிடம் செய்தி தெரிவித்து உடன் வர அழைத்தான். உக்கிரபாண்டியர் சென்று புற்றினையும் புற்றிடங் கொண்டாரையும், கூழைவாலினதாக்கிய (துண்டாடப்பட்ட வாலை உடைய) பாம்பினையும் கண்டார். சங்கரனார் அசரீரியாக ஆனைதரப் பாண்டியர் காடு கெடுத்து நாடாக்கிக் கோவில் கட்டிச் சங்கரநயினார் கோவில் ஊரையும் தோற்றுவித்தார். கோவிலில் கோபுரத்தைத் தாண்டியதும் (கோவில் நிர்வாக அலுவலக இடப்புறத் தூணில் ) காவற்பறையனுடைய திருவுருவத்தை இப்போதும் காணலாம்.



### கோமதி அம்பாள்

இக் கோவிலின் அம்பாளின் பெயர் "கோமதி" என்பதாகும். சந்திரன் (மதி) போலப் பொலிவான முகம் கொண்ட அம்பிகை, இங்கு தவம் புரிய வந்தபோது, தேவலோக மாதர்கள் பசுக்கள் வடிவில் அவளுடன் பூமிக்கு வந்தனர். எனவே பார்வதி, கோமதி என்று பெயர் பெற்றாள். ஆவுடையாம்பிகை என்றும் இவளுக்குப் பெயர் உண்டு. "ஆ" என்றாலும் பசு என்பதே அர்த்தம். பசுக்களாகிய உயிர்களை ஆள்பவள் என்ற பொருளில் இப் பெயர் அமைகின்றது. திங்கட்கிழமைகளில் அம்பாளுக்கு மலர்ப்பாவாடை, வெள்ளிக் கிழமையில் தங்கப்பாவாடை அணிவித்து அலங்காரம் செய்கின்றனர். இங்கு அம்பாள் சந்நிதி முன்மண்டபத்தில் சக்கரம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இதை, "ஆக்ஞா சக்கரம்" என்கின்றனர். மனநோய், மனக்குழப்பம் உள்ளிட்ட சித்தம் சம்பந்தப்பட்ட குறை உள்ளவர்கள் இந்தச் சக்கரத்தின் மேல் அமர்ந்தால், நோய் நிவர்த்தியாவதாக நம்பிக்கை.



### சங்கர நாராயணர்

இவ் ஆலயத்தின் பெருமானுக்குச் சங்கரநாராயணர் என்பது பெயர். சிவன், அம்பாள் சந்நிதிகளுக்கு நடுவில் சங்கரநாராயணர் சந்நிதி உள்ளது. சிவனுக்குரிய வலப்பாகத்தில் தலையில் கங்கை, பிறைச்சந்திரன், அக்னி, சடாமுடி, காதில் தாடங்கம், கையில் மழு, மார்பில் உருத்திராட்சம், இடுப்பில் புலித்தோல் ஆடை இருக்கிறது. திருவாசியில் நாக வடிவில் சங்கன் குடை பிடித்தபடி இருக்கிறான். திருமாலுக்குரிய இடப்பாகத்தில் நவமணி கிரீடம், காதில் மாணிக்கக் குண்டலம், மார்பில் துளசிமணி மற்றும் லட்சுமி மாலை, கையில் சங்கு, இடுப்பில் பீதாம்பரம் இருக்கிறது. இவர் பக்கமுள்ள திருவாசியில் நாகவடிவில் பதுமன் குடை பிடிக்கிறான். இந்தச் சந்நிதியில் காலைப் பூசையில் துளசிதீர்த்தம் தரப்படும். மற்ற நேரங்களில் விபூதி தருவர். பூஜையின் போது வில்வம், துளசி மாலைகளை அணிவிக்கிறார்கள். சிவன் அபிஷேகப்பிரியர். திருமால் அலங்காரப்பிரியர். எனவே திருமாலுக்கு உகந்த வகையில் சங்கரநாராயணர் அலங்காரத்துடன் காட்சி தருகிறார். இவருக்கு அபிஷேகம் கிடையாது. இச்சந்நிதியில் ஸ்படிக லிங்கமாக காட்சி தரும் சந்திரமவுலீஸ்வரருக்கே அபிஷேகம் செய்யப்படும். சிவராத்திரி, ஏகாதசி நாட்களில் உற்சவருக்குச் சிறப்பு பூஜை நடக்கும். ஆடித்தபசன்று மட்டும் அம்பாளுக்கு காட்சி தர இவர் வெளியே புறப்பாடாகிறார்.

### நாகத்தில் அமர்ந்த சிவன்:

சுவாமி பிரகாரத்தில் வன்மீகநாதர் சந்நிதி இருக்கிறது. புற்று வடிவில் அமைந்த இச்சந்நிதியில் சிவன் சுயரூபத்துடன் காட்சி தருகிறார். தலைக்கு மேலே குடை பிடித்தபடி இருக்கும் நாகத்தின் மீது இவர் அமர்ந்திருப்பது அபூர்வ அமைப்பு. புற்றுக்குள் (வன்மீகம் என்றால் புற்று) இருப்பவர் என்பதால் இவருக்கு இப்பெயர். நாகதோஷம் உள்ளவர்கள் புற்று மீது மஞ்சள் தூவி வேண்டிக் கொள்கிறார்கள். இச்சந்நிதி எதிரில் பஞ்ச நாக சிலைகள் இருக்கிறது. பக்தர்கள் இச்சிலைகளுக்கு பாலபிஷேகம் செய்கிறார்கள்.

### புற்று மண்ணே பிரசாதம்

சங்கரன்கோவில் பாம்புகள் வழிபட்ட கோயில் என்பதால் இங்கு புற்று இருக்கிறது. புற்று மண்தான் பிரதான பிரசாதம். நோயுள்ளவர்கள் இந்த மண்ணை நீரில் கரைத்து மருந்தாகச் சாப்பிடுகின்றனர்.

### இரண்டு நாள் அன்னாபிஷேகம்:

சிவாலயங்களில் ஐப்பசி பௌர்ணமியன்றுதான் லிங்கத்திற்கு அன்னாபிஷேகம் செய்வர். ஆனால், சங்கரன்கோவிலில் சித்திரை மற்றும் ஐப்பசி மாதப்பிறப்பன்று அன்னாபிஷேகம் செய்கின்றனர். துவங்கும் புதிய வருடத்தில் உணவிற்குப் பஞ்சமில்லாத நிலை இருக்க வேண்டும் என்பதற்காக சித்திரையிலும், ஐப்பசி புண்ணிய கால துவக்கம் என்பதால் அம்மாதத்தின் முதல் நாளிலும் இந்த அபிஷேகத்தைச் செய்கிறார்கள்.

# ஆடி அமாவாசையில் வீடு தேடி வரும் முன்னோர்கள்

அஸ்ட்ரோ சுந்தரராஜன் சென்னை

**ஆடி அமாவாசை:**

சூரியன் பிதுர்க்காரகன், சந்திரன் மாதுர்க்காரகன். இவர்களை சிவ-சக்தி சொரூபமாக சாத்திரங்கள் கூறுகின்றன. இந்த இரண்டு கிரகங்கள் சேரும் நாளையே அமாவாசை என ஜோதிட நூல்கள் கூறுகின்றன. அதிலும் சந்திரனின் வீடான கடகத்தில் சூரியன் சந்திரனுடன் சேர்வது மிகவும் விசேடமான ஆடி அமாவாசையாகும். பிதுர்க்காரகனின் நாளான ஞாயிற்று கிழமையில் ஆடி அமாவாசை வருவது கூடுதல் சிறப்பாகும்.

**வீடு தேடி வரும் முன்னோர்கள்:**

நமது மூதாதையர்களான பிதிரர்கள் அவர்கள் நினைக்கிற போதெல்லாம் பூலோகத்திற்கு வர இயலாது. ஆனால் அமாவாசை, மாதப்பிறப்பு, அவர்கள் இறந்த திதி மற்றும் மகாளயபட்ச தினங்களில் தான் அவர்கள் பூலோகத்திற்கு வர அனுமதிக்கப்படுகிறார்கள். அமாவாசை அன்று ஒவ்வொரு வீட்டு வாசலிலும் அந்தந்த வீட்டு பிதிரர்கள் வந்து நின்று கொண்டு காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எள் கலந்த தண்ணீரை தரவேண்டும். இதனால் அவர்கள் மனம் மகிழ்ந்து ஆசீர்வதிப்பர். இவ்வாறு செய்யாவிட்டால் பிதிரர்கள் வருத்தப்படும்போது அது பிதிர் தோஷமாக அமைகிறது.

**முன்னோர்களின் ஆசி:**

ஒரு ஜாதகத்தில் பூர்வபுண்ணிய ஸ்தான பலம் குறைந்தவருக்கு, சுகமாக வாழ துணைபுரிவது தெய்வாம்சம் பொருந்திய முன்னோர்கள் தான். இவர்களை வழிபடும் முறைக்கு பிதுர் தர்ப்பணம் அல்லது சிரார்த்தம் என்று பெயர். நம் மூன்று தலைமுறையில் உள்ள முன்னோருக்குச் செய்கிற ஆராதனை, நம்மையும் நம் சந்ததியையும் இனிதே வாழ வைக்கும் என்கிறது கருடபுராணம்.

**வசு ருத்ர ஆதித்யர்கள்:**

பிதிரர்கள் எனப்படும் நம் முன்னோர் வசு, ருத்ர, ஆதித்யர் ஆகிய மூவரின் தொடர்புடன் இணைந்தவர்கள். ஸ்தூல வடிவத்தை விட்டு, சூட்சும வடிவில் இருப்பவர்கள். தேஜஸ் - வாயு போன்ற லேசான பஞ்சபூதங்களைத் தழுவிப் பரவியிருப்பவர்கள். திவ்ய பிதிரர்களைப் போல் தெய்வாம்சம் பொருந்தியவர்கள். தர்ப்பணம் வாயிலாகவும் பிண்டம் வாயிலாகவும் வழிபட வேண்டியவர்கள்.

**பிதிரர் வழிபாடு:**

நமது முன்னோர்களில் ஒருவர் இறந்த திதி, பட்சம், தமிழ்மாதம் அறிந்து, ஒவ்வொரு தமிழ்வருடமும் அதே திதியன்று (ஆங்கிலத் தேதிக்கு ஒவ்வொரு ஆண்டும் மாறிவரும்) குடும்பத்தார்கள் பிண்டம் செய்து வைத்து படைப்பதே சிரார்த்தமாகும். இதனால் குடும்பத்தில் சகல தோஷங்களும் நிவர்த்தியாகின்றன. இந்த தர்ப்பணத்தை இதேபோல அமாவாசைத் திதிகளிலும்செய்து வந்தால் மிகப்பெரும் நன்மைகள் உண்டாகும்.

**பிதிர் (பித்ரு) தோஷம்:**

இந்தப் புனிதமான தர்ப்பணங்களைச் செய்யாமல் இருந்தால், குழந்தையின்மை, கருக்கலைவு, குடும்பத் தகராறு, ஆரோக்கியக் குறைபாடு, அகால மரணம், திருமணத் தடை, வறுமை, கடன், வேலையில்லா நிலை, தீய பழக்கங்கள், ஊனமுற்ற குழந்தைப் பிறப்பு, மூளை வளர்ச்சிக் குறைவுள்ள குழந்தைப் பிறப்பு போன்ற விரும்பத்தகாத சம்பவங்கள் குடும்பத்தில் நடைபெற்று, நம் நிம்மதியைக் குலைத்துவிடும். இவை பித்ரு தோஷம்,



**இந்த ஆடி அமாவாசையைத் தவற விடாதீர்கள் 31.07.2019**

# வாழ்க்கையையே மாற்றும் சக்தி வாய்ந்த ஆடி அமாவாசை

மாத்ரு தோஷம், நாதி தோஷம், பந்து தோஷம், புத்ர தோஷங்களாகத் திகழ்கின்றன. இவை முறையற்ற வாழ்க்கை, தேவையற்ற கோபம், மன உளைச்சல், மன அழுத்தம், தற்கொலைச் சிந்தனை, உடல்வலி போன்றவற்றை உருவாக்கி, நிம்மதியற்ற வாழ்க்கையைத் தந்துவிடும்.

## ஜாதகத்தில் பித்ரு தோஷத்தை எப்படி அறிவது?

1. பிறந்த ஜாதகத்தில் நிற்கும் ராகு கேதுக்கள் இந்த கலிகாலத்தில் பிதுர்தோஷத்துடன் பிறக்க வைக்கின்றன. இந்த பிதுர்தோஷம், நாம் முற்பிறவியில் செய்த பாவங்களின் விளைவுகளை அனுபவிப்பதற்காகவே குறிப்பிட்ட இடங்களில் நிற்கும்போது நம்மைப் பிறக்க வைக்கின்றன.
2. பிறந்த ஜாதகத்தில், லக்னத்துக்கு 1, 5, 7, 9 முதலான இடங்களில் இராகு அல்லது கேது இருந்தால் நீங்கள் பிதுர்தோஷத்துடன் பிறந்துள்ளதாக அர்த்தம்.
3. சூரியன் மற்றும் சந்தினுக்கு கிரஹண தோஷத்தை தரும் ராகு மற்றும் கேது சூரியனோடும் சந்திரனோடும் இணைந்து நிற்பது மற்றும் சூரியனும் சந்திரனும் ராகு/கேது சாரத்தில் நிற்பது போன்றவை பித்ரு தோஷத்தை உறுதி செய்கின்றது.
4. ஒரு ஜாதகத்தில் சனீஸ்வரரின் நிலையும் பித்ரு தோஷத்தை தெரிவிக்கும். சனீஸ்வர பகவான் பித்ரு ஸ்தானத்தில் நிற்பது, வக்ரம் பெற்று நிற்பது, குடும்பத்தில் அனைவரின் ஜாதகங்களிலும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வக்ரம் நீசம் ஆகிய நிலைகளில் நிற்பது பித்ரு தோஷத்தை தெரிவிக்கும்.

**பித்ரு தோஷ பரிகாரங்கள்:**

1. ஜாதகத்தில் பித்ரு தோஷம் இருப்பவர்கள் ஈழத்தில் கீரிமலை, இந்தியாவில் இராமேஸ்வரம், திருப்புல்லானி மற்றும் கயா அக்ஷயவடம் போன்ற இடங்களில் திலஹோமம் செய்வது மற்றும் பிண்ட சிரார்தம் செய்வது பித்ரு தோஷத்தை போக்கும் என்கிறது சாஸ்திரம்.
2. வைகை ஆற்றங்கரையில் அமைந்துள்ள புஷ்பவனேஸ்வரர் - சவுந்தரநாயகியம்மன் கோயில் மிகவும் சிறப்பு வாய்ந்த சிவத்தலமாகும். பாண்டிய நாட்டின் பாடல் பெற்ற 14 தலங்களில் திருப்புவனமும் ஒன்று. அக்காலத்தில் புகழ்பெற்ற சுச்சோதி மன்னன் முன்னோர்களுக்கு திதி கொடுக்க திருப்புவனம் வந்து வைகையாற்றங்கரையில் வேண்டுதல் செய்துள்ளார். திருப்பூவணத்தில் அஸ்தியைக் கரைத்தால் பாவ விமோசனம் கிடைக்கும் என்கிறார்கள். காசியைக் காட்டிலும் வீசம் பங்கு அதிகம். (பதினாறு பங்கு). இராமேஸ்வரத்தைக் காட்டிலும் ஆறு பங்கு அதிகம். மதுரையைக் காட்டிலும் முக்கால் பங்கு அதிகம்.
3. திலதைப்பதி எனப்படும் திலதர்ப்பணபுரி: திலதர்ப்பணபுரி. திலம் என்றால் எள். புரி என்றால் ஸ்தலம். எள் தர்ப்பணம் செய்ய சிறந்த ஸ்தலம் என்பது பொருள். இந்தியாவில் பித்ரு ஸ்தலங்கள் 7 உள்ளன. அவை, காசி, ராமேஸ்வரம், கயா, திரிவேணி சங்கமம், ஸ்ரீவாஞ்சியம், திருவெண்காடு, ஏழாவதாக திலதர்ப்பணபுரி. பித்ரு ஸ்தலங்களில் ஒன்றாக இந்த திலதர்ப்பணபுரி விளங்குகிறது. இராமேஸ்வரத்தில் செய்யப்படும் பிதிரர்கள் சம்பந்தமான அனைத்து பூஜைகளும் திலதர்ப்பணபுரியிலும் செய்யப் படுகின்றன.
4. பித்ரு தோஷம் நீங்க ஒருமுறை சென்று பரிகாரம் செய்தால் மட்டும் நீங்காது. தொடர்ச்சியாக அமாவாசை, இறந்த திதி, மகாளயம் மற்றும் பித்ரு தினமான மக நட்சத்திரம் போன்ற தினங்களில் தர்பணம், சிரார்தம் செய்து வழிபடவேண்டும். அவ்வாறு செய்தால்தான் பித்ரு தோஷம் முழுமையாக நீங்கும்.

**புனிதமான ஆடி அமாவாசையன்று, முன்னோரையும் மறைந்த தாய், தந்தையரையும் நினைத்து திதிகொடுப்பது. புண்ணிய நதிகள், கடல் போன்ற இடங்களில் புனித நீராடி இஷ்டதெய்வ ஆலயங்களில் வழிபாடு, சிறப்பு பூசைகள் செய்வது, ஏழைகள், இல்லாதோர், இயலாதோருக்கு அன்னதானம், ஆடைதானம் செய்வது நாம் செய்த பாவங்கள், கர்மவினைகள், தீவினைகள் அனைத்தையும் போக்கி வாழ்வில் புண்ணியத்தை சேர்க்கும் என்பது நம்பிக்கை.**

# குடும்பத்தை தழைக்கச் செய்யும் ஆடி மாத நீத்தார் கடன்!

# ' 'மற(றை)ந்து போகும்' தமிழரின் '
# தனித்துவமான விழாக்களும் பண்டிகைகளும்

முருகையா பிரணவன்

(தொடர் 01)

# ஆடிப்பிறப்பு

ஆடி மாதம், சைவத் தமிழ் மக்கள் வாழ்க்கையிலே முக்கியமான ஒரு காலம் எனலாம். இந்த மாதத்திலே பல முக்கிய நிகழ்வுகள் இடம்பெறுவதைக் காணலாம். ஆடிப்பிறப்பு, ஆடிப்பூரம், ஆடி அமாவாசை, ஆடிவேல், ஆடிவெள்ளி, ஆடிச்செவ்வாய், நாகசதுர்த்தி, கருடபஞ்சமி, வரலட்சுமி விரதம் ஆகிய முக்கிய தினங்கள் இம் மாதத்திற்குரிய தனித்துவமான தினங்களாகும். அதேபோலப் பல கோயில்களில் கொடியேற்றத்துடன், தேர், தீர்த்தம் உள்ளிட்ட உற்சவங்கள் என்பனவும் இடம்பெறுகின்ற புண்ணிய மாதம் எனவும் இதனைக் குறிப்பிடுவர்.

உத்தராயண புண்ணிய கால ஆரம்பத்திற்குத் தைப்பொங்கலையும், தட்சணாயணகால ஆரம்பத்திற்கு ஆடிப்பிறப்பையும் கொண்டாடுவது எமது முன்னோர்களின் மரபாக இருந்துள்ளது. ஆடி பிறக்கும்போது மாரியும் பிறக்கின்றது என நம் மூதாதையர் நம்பினார்கள். இக் காலத்தில், கோடைகால வெப்பம், காண்டாவனம் படிப்படியாகத் தணிந்து குளிர்மை படிப்படியாக வளர்ச்சியடையும்.

ஆடிமாதத் தொடக்க காலம் வெப்பம் மிகுந்ததாகவும், கடுங்காற்று வீசுகின்ற காலப் பகுதியாகவும் இருக்கும். இதனாலேயே நம் முன்னோர்கள், "ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும்" என்றும் கூறினார்கள். இந்த ஆடிக்காற்றை 'கச்சான் காற்று' என்றும் கிராம மக்கள் கூறுவர். விவசாயிகள் இக் காற்றின் நகர்வினைக் (வீசும் காலத்தை) கணக்கிட்டு, எதிர்வரும் கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் எப்படி மழை வீழ்ச்சி அமையும் எனத் துல்லியமாகக் கூறுவர்.

இந்தக் கச்சான் காற்று, மிகுந்த வெப்பமானதாக உள்ளதனாலேயே காட்டுப் பழங்களான வீரை, பாலை, காட்டுப் பேரீச்சை, கடுபுளியம்பழம், நாவற்பழம், விளாம்பழம் போன்றவை கனிகின்றன. இப்பழங்களை மக்கள் நன்கு விரும்பி சுவைப்பதுடன் இவை மிகுந்த ஊட்டச்சத்தும் மிக்கவையாகவும் திகழ்கின்றன.

எமது சீவியத்திற்குத் தேவையான விளைபொருட்களை விளைவிப்பதற்கு மாரி மழை இன்றியமையாதது. ஆடிப் பிறப்பைக் கொண்டாடுவதனூடாக மாரிகாலமும் வரவேற்கப்படுகின்றது. ஆடி மாதத்தில்தான் எமக்குத் தேவையான விளைபொருட்களுக்கும் வித்திடப்படுகின்றது.

பிதுர்க் கிரியைகட்குப் பிரதானமானது ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசை தினமாகும்.

"கற்புக்கரசியான கண்ணகிக்கு ஆட்டைவிழா எடுத்து நாடு வளங் கண்டது" எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. ஆடி எனும் இயக்கன் ஒருவன் தன் காதலியிடந் தூதுவிட்டுத் துயர் நீக்கியதும் இம் மாதம் என வரலாறு கூறுகின்றது.

தட்சணாயனத்தின் ஆரம்பம் - கார்காலம், இருட்காலம், மழைக்காலம், ஓய்வுகாலத்தின் தொடக்கம்தான் ஆடிப் பிறப்பு ஆகும். ஆடி மாதத்தில் நற்கருமங்கள் எதையும் தொடங்கமாட்டார்கள் எனக் கூறப்பட்டாலும்,

" ஆடிவிதை தேடி விதை......"

"ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும்......"

"ஆடி ஆவணி ஆன புரட்டாதி
காடி தோய்ந்த கனபனங்காயைத்
தேடித்தேடித் தினமும் புசிப்பவர்
ஓடியோடி யுலகெலாம் பீச்சுவர்"

என்பன போன்ற பழம் பாடல்கள் ஊடாக இம் மாதம் ஆனந்தமாகக் கொண்டாடப்பட்டுவந்தது என்பதை அறியமுடிகின்றது.

ஆடிப்பிறப்பினைப் பண்டிகையாகக் கொண்டாடும் மரபு ஈழத்துக்கேயுரியது. தமிழ் வருடத்தின் மத்திய மாதங்களில் ஒன்றான ஆடி முதலாம் நாள் இந்த ஆடிப்பிறப்புக் கொண்டாடப்படுகின்றது. சூரியன் தெற்கில் இருந்து வடக்கிற்கு நகரும் உத்தராயண காலத்தில் நாம் தீம்பாற் பொங்கல் பொங்கி மகிழ்ச்சியாக இப் பண்டிகையைக் கொண்டாடி வருகின்றோம்.

ஆடி மாதப்பிறப்பன்று கூழ் ஆக்கிக் கொழுக்கட்டை அவித்து வழிபாடுகள் செய்தபின், உறவுகள் கூடிக் குதூகலமாகக் கூழைக் குடித்துக் கொழுக்கட்டையை உண்ணுகின்றோம். ஆடிப்பிறப்பின் மகத்துவம் பற்றி நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் அவர்கள் மிகத் தத்ரூபமாக வர்ணிக்கிறார்.

**ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!**

**பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,
வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,
வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரில் சக்கரையுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.
வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே**

பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!

பூவை துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுருண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவாள்
மணக்க மணக்க வாயூறிடுமே

குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே
வண்ணப் பலாவிலை ஒடிப்பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே!

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே!

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தந் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!


கவிஞர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

ஆரம்பக் கல்வி, திண்ணைப் பள்ளிக்கூடங்களாக இருந்த காலங்களில், ஆடிப்பிறப்பு விடுதலை நாளாக இருந்தது. மாணவர்கள் போசாக்குச் சத்துள்ள உணவை உண்ண, இப்படியான பாடல்களைப் பாடி உண்டு மகிழ்ந்தனர்.

பாடசாலைகளில் போசாக்குச் சத்துணவுகளைக் கொடுக்கும் திட்டங்களிற்கு, கூழும் கொழுக்கட்டையும் கொடுத்து நமது முன்னோர்களே வழிகாட்டியுள்ளமையையும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

ஆடிக் கூழ், கொழுக்கட்டை என்ற பிரபலமான உணவுகளை நாம் தேக ஆரோக்கியமான உணவுகள் என்ற முறையிலும் நோக்கலாம். தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரை வெப்ப காலமாகும். ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை குளிர் காலமாகும். வெப்ப காலத்தில் எமது தேகத்தில் கெட்ட நீர், கபம், பித்தம் போன்றவை சேர்ந்திருக்க இடமுண்டு. இவை, மாரி காலத்தில் நோய்நொடிகள் உண்டாக ஏதுவாக இருக்கும். இதனை நீக்கும் சக்திமிக்கதாக ஆடிக் கூழ் பிரபலமடைந்தது. பனங்கட்டி, அரிசி மா, பயறு என்பன கொண்டு கூழ் ஆக்கப்படுகின்றது. சிறுவர்களின் சுவைக்காக தேங்காய் சொட்டும் சேர்க்கப்படுகின்றது. கூழினைக் குடிக்கும்போது (இளஞ்சூட்டில் குடிப்பது நல்லது) வியர்வைமூலம் கெட்ட நீர் தானாகவே அகல்கின்றது. இத்தோடு மலச் சிக்கலையும் இல்லாமற் செய்யும் சக்தி கூழுக்கு உண்டு. இந் நோக்கிற் பார்க்கும்போது ஆடிக் கூழ் தேக சுகத்தைத் தரவல்லது.

அரிசி மா, பயத்தம் பருப்பு, தேங்காயத்துருவல், சர்க்கரை என்பன கொண்டு தயாரிக்கப் படுவதே கொழுக்கட்டை. நீராவியில் அவிக்கப்படும் கொழுக்கட்டை வயிற்றுக்குச் சிறந்த ஆகாரமாக அமைகின்றது. விதம் விதமான கொழுக்கட்டைகள் தயாரிக்கப் படுவதனால் பிள்ளைகள் இதனை விருப்புடன் உண்ணும் பண்டமாக அமைந்துவிட்டது. கூழ், கொழுக்கட்டை என்பன நமது உணவுமுறையில் இரவு நேரத்திற்கான உணவுகளாகக் கொள்ளப்பட்டு வந்தமையையும் நாம் அறியலாம்.

இத்தகைய சிறந்த பொற்காலத்தினுடைய நிலையை இன்று சற்றுச் சிந்தித்துப் பார்க்கின்றேன். தொண்ணூறுகளுக்கு முற்பட்ட காலம் இத்தகைய எமது கலை, கலாச்சாரம், பண்பாடு, உணவு முறைகளைக் கைக்கொண்டு மகிழ்வுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ்ந்தகாலம். உண்மையிலேயே அதுதான் சந்தோஷமான காலம்.

சிலர் கூறக்கூடும் "அந்தக் காலத்தில் நீங்கள் நவீன வசதிகளை அனுபவிக்கவில்லை, காட்டுவாசிகள் போல மிகவும் பின்தங்கி இருந்தீர்கள்" என்று. ஆனால் உடல் உழைப்பையும் சந்தோஷமான உறவுகள் சேர்ந்த வாழ்க்கை முறையையும் கொண்ட உண்மையைச் சற்றுத் திரும்பி நினைத்துப் பாருங்கள். இன்றைய போலித்தனமான மனித வாழ்க்கை உங்களுக்கே புலப்படும். அந்தப் பொற்காலத்தில் நாம் கொண்டாடிவந்த தனித்துவமிக்க விழாக்கள், பண்டிகைகளை, இன்று நமது சோம்பேறித் தனத்தாலும், பொருத்தமற்ற வாழ்க்கை முறையாலும் சிறிது சிறிதாக மறந்து வருகின்றோம்.

ஒரு வேளையேனும் நேர்மையாக உழைத்துச் சாப்பிட்ட காலம் மறைந்து, மூன்று வேளையும் அடுத்தவனை ஏய்த்து வாழநினைப்பது என்பது இன்றைய தலைமுறையில் ஆழஊடுருவிக்கொண்டிருக்கும் விஷம்.

ஈழத்துக்கேயுரிய 'ஆடிப்பிறப்பு' தன்னுடைய கடைசிக்காலங்களில் இருக்கின்றது. இந்தியத் தொ(ல்)லைக்காட்சிகளின் வருகையுடன் அளவுக்கு மீறிய அளவில் ஈழத்தமிழர்களிடையே இந்திய திரைநாகரிக தாக்கம் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டது. நமது மக்கள் அவர்களைப்போல உடையணிந்து பேசினால்தான் இந்தச் சமூகம் தங்களை உயர்நிலையில் பார்க்கும் என்ற அற்ப ஆசை நம் ஒட்டுமொத்தத் தமிழினத்தையும் விரைவில் அடையாளமறுத்துக் குழிதோண்டிப் புதைத்துவிடும் என்பது சத்தியமான உண்மை. எம்முடைய தனித்துவ பாரம்பரியத்தை நாம் இலகுவில் எந்தவித குற்றவுணர்வுமின்றி மறந்துவிடுகின்றோம் என்பதையும் நாம் ஒவ்வொருவரும் கசப்புடன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இந்து ஒளி
மாமன்றச் செய்தி மடல்
All Ceylon Hindu Congress Newsletter

## LETTER TO HIS EXCELLENCY HONOURABLE PRIME MINISTER OF INDIA

6th June 2019

Your Excellency Shri Narendra Modi
Prime Minister of the Republic of India
India

Honourable Sir,

On behalf of the Hindus of this country our Congress (the Federation of Hindu Religious Associations and Trusts in Sri Lanka) is proud of your being re-elected to lead India for a second term.

We recollect that during your initial election campaign you said that "with Tamils living all over the world including Sri Lanka, it should be a priority of the Indian Government to take care of their well being" and you promised to do so if your Government assumes power after the elections. His Almighty has again given you that power and we, the Hindus of this country, most of whom are Tamils, are hopeful that your Government will expedite finding a political solution to satisfy the aspirations of Tamils in this country.

The Tamils of this country the majority of whom are Hindus, have been suffering for more than six decades. They have been denied of their entitlements and rights by the successive governments of Sri Lanka who had chosen to obtain and enjoy majority votes on racists cries and
Communal discrimination.

Despite several appeals from minorities, the Governments in the centuries have failed to rise above their political ambitions and narrow mindedness and agree to grant the Tamil speaking people their due rights in satisfaction of their aspirations to live as citizens of Sri Lanka with equality and dignity. They have been often reduced to the status of second class citizens and on many occasions as refugees.

**We appeal on behalf of the Hindus to take appropriate action at diplomatic level and restore the rights of our people so that they can also live in their country with honour and dignity.**

We also take this opportunity to bring to your good-self's attention that several Hindu Temples which were damaged during the war time have not been restored. This unfortunate situation prevails in villages of poor Hindus who have not been given appropriate funds by the Government of Sri Lanka to restore their Temples despite several attempts. Further there have also been incidents of Hindu Temples being destroyed and Buddhist Temples subsequently being built in the vicinity erasing evidence of the previously existing Hindu Temple.

WE THEREFORE ALSO APPEAL to your Government to financially assist the restoration of these Temples. We are willing to furnish the requested details of such assistance required.

Yours in Service,
**V. KANDASAMY**
***GENERAL SECRETARY***
**ALL CEYLON HINDU CONGRESS**

## கன்னியா வென்னீரூற்று, புராதன விநாயகர் ஆலயத்தினை ஆக்கிரமித்து விகாரை அமைக்கும் செயலுக்கு மாமன்றம் கடும் கண்டனம்

ஆண்டுகள் பல கடந்தாலும், ஆட்சிகள் பல மாறினாலும் இந்த நாட்டில் வாழும் இந்துக்கள் மீது மதரீதியாக ஏதோ ஒரு வகையில் அடக்கு முறைகளும் துன்புறுத்தல்களும், அதர்மமான செயல்களும் நடந்து கொண்டேயிருக்கின்றது.

இந்நாட்டின் அரசாங்கம் 2015ம் ஆண்டில் "நல்லாட்சி" என்ற வாசகத்துடன் ஆட்சிப்பொறுப்பிலமர்ந்த போது, இந்நாட்டில் நல்லிணக்கம் உருவாகி சமாதான சகவாழ்வு மலரும் என்ற பெரும் நம்பிக்கை இந்நாட்டு தமிழ் மக்களுக்கு இருந்தது. ஆனால் அரசோ, அரச நிறுவனங்களோ செயற்பட்டு வரும் முறையானது, தமிழ் மக்களின் அந்த நம்பிக்கையைக் குறைத்து இல்லாமற் செய்வதுபோல உள்ளது.

ஈழத்திருநாட்டின் பலபகுதிகளிலும் இந்துமத தொன்மைச் சின்னங்கள் காணப்படுகின்றன. அச் சான்றுகள் காலத்துக்கு முந்திய வரலாற்றைப் பறைசாற்றி நிற்கின்றன. இவற்றையெல்லாம் மாற்றியமைத்து, அவற்றைப் பௌத்த சின்னங்களாக திரிபுபடுத்தி, வரலாற்றை மாற்றும் கைங்கரியத்தை "தொல்லியற் திணைக்களம்" முன்னெடுத்து வருகின்றது.

ஒரு அரச திணைக்களம் என்ற வகையில் அது, இந் நாட்டு மக்களுக்கு இன-மத-மொழி வேறுபாடின்றிச் செயலாற்ற வேண்டியது சட்டத்தின்படி கட்டாயமானதாகும். தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமித்துள்ள இந்து ஆலயங்கள் மற்றும் தமிழரின் புராதன வாழ்விடங்கள் தொடர்பில் பல தடவைகள் அரசிற்கு முறையிட்டும் அரசாங்கமும் பாராமுகமாக இருந்து வருகின்றது எமது மக்களை வேதனைகொள்ளச் செய்துள்ளது.

திருகோணமலை சிவன் ஆலயம், கன்னியா வென்னீரூற்றுக்கள் ஆகிய கிழக்குமாகாண இடங்களிலும், வடக்கில் மன்னார் திருக்கேதீச்சரம், செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் வெடுக்குநாறிமலை எனப் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தொல்லியல் திணைக்களத்தால் பட்டியற்படுத்தப்பட்டு, அங்கு பௌத்த விகாரைகள் அமைப்பதற்கு திணைக்களம் நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவிவருகின்றது.

இந்த வகையிற்தான், திருகோணமலை, கன்னியா வென்னீரூற்றுப் பிள்ளையார்கோவில் அமைந்துள்ள காணியும் தொல்லியல் திணைக்களத்தால் புராதன இடமாகப் பட்டியற்படுத்தப்பட்டு அந்தப் பிள்ளையார் கோவில் கட்டிட வேலைகளுக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்ட அதேவேளை, அருகிலுள்ள வில்கம் விகாராதிபதி தலைமையில் அந்தக் காணியில் அடாத்தாகக் குடியேறி விகாரை அமைக்கும் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இச் செயற்பாடுகள் தொடர்பில் அகில இலங்கை இந்து மாமன்றம் தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிப்பதுடன், எமது உரிமைகளை மீட்டு எமது பாரம்பரிய சின்னங்களைப் பேணுவதற்கு மாமன்றம் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கவும் தயங்காது என்பதையும், தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## நெற்றி வகிட்டில்
# குங்குமத்தை ஏன் வைத்துக்கொள்கிறார்கள் தெரியுமா...?


தமிழ்ப் பெண்கள், நெற்றியில் பொட்டு அல்லது குங்குமம் வைப்பது கலாசார அடையாளமாகவும் மங்கலச் சின்னமாகவும் கருதப்படுகிறது. இரு புருவங்களுக்கு மத்தியில் உள்ள இடம் நெற்றிப் பொட்டு என அழைக்கப்படுகிறது. மருத்துவ ஆராய்ச்சிகளின்படி நினைவாற்றலுக்கும், சிந்திக்கும் திறனுக்கும் உரிய இடம் அதுவே. யோகக்கலை இதனை 'ஆக்ஞா சக்கரம்' எனக் குறிப்பிடுகிறது. இந்த இடம் 'எலக்ட்ரோ மேக்னடிக்' என்ற மின்காந்த அலைகளாக மனித உடல் சக்தியை வெளிப்படுத்துகிறது. அதிலும், முன் நெற்றி மற்றும் நெற்றிப் பொட்டு இரண்டும் மின்காந்த அலைகளை வெளியிடுவதில் முக்கியமானவை. அதனால்தான், நம் மனம் கவலையால் வாடும்போது, தலைவலி அதிகமாவதை உணரலாம்.நெற்றியில் இடு திலகம், அந்தப் பகுதியைக் குளிர்விக்கிறது. மேலும் நம் உடலின் சக்தி வெளியேறி விரயமாவதைத் தடுக்கிறது. எனவே, நெற்றித் திலகம், நம்மை இறை அனுக்கிரகத்துடன் வாழவைப்பதுடன் எதிரமறை சக்திகள் நம்மை அணுகாமல், தீய எண்ணங்கள் நம்முள் எழாமல் காக்கிறது.

"நெற்றியில் திலகத்தை வைத்து கொள்ளும்போது, "நான் கடவுளை எப்போதும் மனதில் நிலை நிறுத்துகிறேன். இறை தன்மையுள்ள இந்த உணர்வு, எனது எல்லாச் செயல்களிலும் ஊடுருவிப் பரவட்டும். என் செயற்பாடுகளில் எப்போதும், நேர்மையும் உண்மையும் நிறையட்டும்", என்று பிரார்த்திக்க வேண்டும். நெற்றித் திலகம் லட்சுமிகரமானது என்பர்.

எனவே, குங்குமம் வைக்கும் போது, "ஸ்ரீயை நமஹ" என்றோ, "மகாலட்சுமியே போற்றி" என்றோ சொல்லியபடி வைத்துக் கொள்வது பெண்களுக்கு நலம் பயக்கும். குங்குமத்தை, மோதிர விரலால்தான் நெற்றியில் இட வேண்டும். மற்ற விரல்களைப் பயன்படுத்தக்கூடாது. பெண்கள், தலை வகிட்டிலும், நெற்றியிலும், தொண்டைக்குழியிலும், மாங்கல்யத்திலும் பொட்டு வைக்கிறார்கள். இந்த நான்கு இடங்களிலுமே லட்சுமி குடியிருப்பதாக ஐதீகம். கோயில்களிலோ, வீட்டிலோ குங்குமத்தை எடுத்து இடது கையில் போட்டு கொண்டு, வலது கைவிரலால் தொட்டு வைப்பதும் கூடாது. வீட்டில் யாராவது ஒருவரை வலது உள்ளங்கையில் சிறிதளவே போடச் சொல்லி, வலதுகை மோதிர விரலை வளைத்துக் குங்குமத்தைத் தொட்டு நெற்றியில் இட வேண்டும்.

## நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் மகோற்சவக் காட்சிகள் சில...

















HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/37/NEWS/2018




நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் 2018ம் ஆண்டு மகோற்சவ சிறப்பிதழ் "இந்து ஒளி", பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலயத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.



இவ்விதழ் இல. 48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.